# தமிழ்ப் பொழில்

**தமிழாராய்ச்சித் திங்களிதழ்**

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 61 மலர் 9

ஆழிநிகர்படை சேர்ப்பாய் !

பொருள் சேர்ப்பாய் ! இன்பத்தை
ஆக்குவிப்பாய் !
ஊழியஞ்செய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
உணர்ச்சி கொண்டே.
பிணி நீக்க எழுத்திரு நீ
இளந்தமிழா, வரிப்புலியே,
பிற்றை நாளுக்
கணி செய்யும் இலக்கியம் செய் !
அறத்தைச் செய் ! விடுதலைகொள்
அழகு நாட்டில்

— பாரதிதாசன் ('தமிழியக்கம்')

உள்ளுறை | | பக்கம்


1. பேரா கெ. என். சுவராஜபிள்ளையின் இலக்கியப்பணி .... 385
2. எவ்வழி நல்லவர் ஆடவர் .... 399
3. ஒரு வீரனின் நிகழ்ச்சி .... 413
4. ஐய வினாக்கள் .... 417
5. பாம்புகள் பற்றிய சில உண்மைகள் .... 421
6. சிந்தாமணிக் காட்டும் சமுதாய தரப்பிரிவுகள் .... 425
7. மவுன மொழி .... 432

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2018

துணர்: 61 பிரபவ — மார்கழி மலர்: 9

டிசம்பர் — ஜனவரி 1987 – 1988

## பேரா. கெ. என். சிவராஜபிள்ளையின் இலக்கியப்பணி

டாக்டர் இராதா செல்லப்பன்,
எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (மொழியியல்), பிஎச். டி.,
இணைப் பேராசிரியை,
தமிழ்த்துறை,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானல்.

இலக்கிய இலக்கண ஆராய்ச்சியாளராகவும் கவிஞராகவும் தத்துவ மேதையாகவும் விளங்கியவர் பேராசிரியர் கெ. என். சிவராஜபிள்ளை. நாஞ்சில் நாட்டவரான இவர்

பிறந்தது 1879 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கை கொண்டான் என்னும் ஊரில். தாயார் முத்தம்மாள்; தந்தை நாரயணபிள்ளை. பேராசிரியரின் தமையனார் குமரேச பிள்ளை. இவரும் தமிழ்ப் புலமையுடன் ஆங்கில அறிவும் உடையவர். சட்டம் பயின்று வழக்கறிஞராகப் பணியாற்றியவர். கம்பராமாயணத்தில் மிகுந்த புலமையுடைய குமரேசபிள்ளை கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நடத்துவதில் வல்லவர். இச் சொற்பொழிவு முறையை நாகர்கோவில் மக்கள் 'வாசிப்பு முறை' என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். இங்ஙனம் 'கம்பராமாயண வாசிப்பு முறையை நாகர்கோவில் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் அறிமுகப்படுத்திய பெருமை குமரேசபிள்ளையையே சாரும். இவர் 'கம்பராமாயணம் குமரேசபிள்ளை' என்ற அடைமொழிப் பெயரால் அறியப்பட்டுப் புகழ் பெற்றவர். குமரேச பிள்ளையும் சிவராஜபிள்ளையும் இலக்கியச் சர்ச்சையில் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். அவர்கள் ஒரே சமயத்தில் பலமணி நேரங்கள் அதற்காகச் செலவிடுவதுண்டு. இந்த இலக்கியச் சர்ச்சையில் முக்கியமாக இடம்பெறுவன கம்பராமாயணமும் திருக்குறளும்தாம். இந்தச் சூழ்நிலைதான் பிள்ளையவர்கள் கம்பராமாயணக் கௌஸ்துபம், வாழ்க்கைநூல் ஆகிய இரண்டும் எழுதத் தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும்.

## கல்வியும் அரசுப்பணியும்

சிவராஜபிள்ளையவர்களின் சிறுவயதுப்பருவம் பீமநகரி என்னும் ஊரில் கழிந்தது. கோட்டாறு உயர்நிலைப்பள்ளியில் தமது பள்ளிப் படிப்பினை முடித்த அவர் பட்டப்படிப்பிற்காகச் சென்னை சென்றார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் டாக்டர் மில்லரின் மாணாக்கராகப் பயின்று தத்துவவியலில் பட்டமும் பெற்றார். இப் பட்டப்படிப்பு, பின்னர் தத்துவக் கட்டுரைகள் மற்றும் நூல்கள் பலவற்றை எழுதி உலகப்புகழ் பெறும் வாய்ப்பை அவருக்கு அளித்தது. தமது பட்டப்படிப்பினை முடித்த உடனேயே திருவிதாங்கூர் அரசின் காவல்துறையில் ஆய்வாளராகச் சுசீந்திரத்தில் பதவியேற்றார். மிகுந்த நேர்மையும் கடமை யுணர்ச்சியும் கொண்ட அவரால் அக்காலத்திய சூழ்நிலையில் தமது பணிக்கடமைகளைச் செவ்வனே செய்ய இயலவில்லை. அச்சூழ்நிலையில் அவர் தாமாகவே பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

## தமிழறிஞர் தொடர்பு

காவல்துறைப் பணியிலிருந்து விலகிய பிறகு பேராசிரியர் திருவனந்தபுரத்தில் பத்திரிகைத் துறையில் தமது கவனத்தைச் செலுத்தினார். அங்கு ஆராய்ச்சி அறிஞர்கள் பலருடைய தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. அவர்களுள் முக்கியமானவர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. தத்துவவியலில் பட்டம் பெற்றுப் பின்னர்க் காவல்துறை ஆய்வாளராகப் பணியாற்றிய சிவராஜபிள்ளைக்குத் தமிழாராய்ச்சியோடு தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்த பெருமை சுந்தரம் பிள்ளையையே சாரும். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை நடத்திய ஆராய்ச்சிகளுக்குச் சிவராஜபிள்ளையும் உறுதுணையாக இருந்தார். அவர் தயாரித்த 'Directory of Archeology' என்ற நூலாக்கப் பணியில் சிவராஜ பிள்ளைக்கும் சிறப்பான பங்கு உண்டு. அவ்வமயம் அங்கு வக்கீல் தொழில் புரிந்து வந்த அவரது உறவினரான பேரா. வையாபுரி பிள்ளையோடும் அவருக்கு ஆராய்ச்சித் தொடர்பு ஏற்பட்டது. சிவராஜபிள்ளையின் அத்தை பேரர்தான் வையாபுரியார். நீதிபதி கே. ஜி சேஷையர் மற்றொரு ஆராய்ச்சி அறிஞர். கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, பண்டித முத்துசாமிப் பிள்ளை, இசையரசு தி. இலக்குமணபிள்ளை முதலிய தமிழறிஞர்களோடும் தொடர்பு கொண்டு தமது தமிழாராய்ச்சியை மென்மேலும் வளர்த்துக் கொண்டார். இவர்கள் வாரந்தோறும் சைவப்பிரகாச சபையில் கூடித் தமிழாராய்ச்சியை வளர்த்தனர். அங்கு, திருவிதாங்கூர் தமிழ்ச் சங்கம் ஒன்றினையும் நிறுவினார். இச்சங்கம் அமைப்பதற்குக் குமரேசபிள்ளையும், தமிழறிஞர் இலக்குமணபிள்ளையும் உறுதுணையாக நின்று ஊக்கமளித்தனர்.

## சமூகத் தொண்டு

திருவனந்தையில், பத்திரிகைப் பணியில் ஈடுபட்டிருந்த பிள்ளையவர்களைச் சமூகப்பணியும் ஈர்த்தது. அவர் மருமக்கள் வழித் தாயத்தார் உரிமையை எதிர்த்துத் திருவிதாங்கூர் அரசுடன் பலமுறை மோதினார். இப்போராட்டத்தின் முடிவில் மருமக்கள் வழித் தாயத்தை ஒழித்தார்.

## சென்னைப் பல்கலைக் கழகத்தில்

திருவனந்தபுரத்தில் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருந்த பிள்ளையவர்களுக்குப் பல்வேறு காரணங்களினால் தாம் பதிப்பித்த பத்திரிகைகளை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பின்னர்த் திரு பொன்னம்பலம் இராமநாதனின் அழைப்பிற்கிணங்க ஓராண்டுக்காலம் யாழ்ப்பாணத்திற்குச் சென்று பணியாற்றினார்.

1927 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் திராவிட மொழிப் புலத்தில் தமிழ்த்துறையினைத் தோற்றுவித்தது. அதன் முதல் தலைவராகும் பேறு பெற்றார் சிவராஜபிள்ளை. ஏழு ஆண்டுகள் அங்குப் பணியாற்றினார். பின்னர் ஓய்வு பெற்று நாகர்கோவிலில் தமது கடைசிக் காலத்தைக் கழித்தார். அக் காலத்தில் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையை உருவாக்கவும் மூலகாரணமாக இருந்தார்.

## ஓய்விற்குப் பின்

பொதுவாக, ஆராய்ச்சிப், பாதையிலே செல்லும் அறிஞர்கள் மனத்தில் கவிதையுணர்வு ஏற்படுவதில்லை. இதற்கு மாறாக பேராசிரியர் பல கவிதை நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் சில இன்னும் அச்சேறாமல் உள்ளன. ஆரம்பகாலத்தில் திருவனந்தபுரத்தில் இருந்தபோதும், பின்னர் ஓய்வுக்காலத்தில் நாகர்கோவிலில் தங்கிய தமது கடைசிக்காலத்திலும், பல கவிதை நூல்கள் அவரால் படைக்கப்பெற்றன.

பேராசிரியர் தரும் ஆராய்ச்சிக் கருத்துகள் அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தைத் தெளிவாக்குகின்றன. காலஆராய்ச்சி, சொல்லாராய்ச்சி மற்றும் சொற்பொருளாராய்ச்சி முதலிய பல்வேறு ஆய்வுகளில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டியதை அவர்தம் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. வெளிவராத நூல்களில் இரண்டு 1941இல் அவரது மறைவிற்குப் பிறகு வெளியிடப் பட்டுள்ளன.

## கால ஆராய்ச்சிப் பணியில்

கால ஆராய்ச்சித் தொடர்பாக இரு நூல்கள் பேராசிரியரால் வெளியிடப்பெற்றுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய காலத்து எழுதப் பெற்றவையே இவை. அவற்றுள் ஒன்று 'உந்து என்னும் இடைச்சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழமை' என்பதாகும். இந்நூல் 1929 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பெற்றது. இதில் கால நிர்ணயத்திற்குச் சொல்லாராய்ச்சியை ஒரு கருவியாகப் பயன் படுத்தியுள்ளார். உந்து என்னும் இடைச்சொல்லின் தோற்றம், வழக்காறு ஆகியவற்றை அவர் முதலில் ஆராய்கிறார். திணை பால், இடம் சுட்டாத வினை ஈற்று விகுதி சங்கத் தமிழ்ச் சொல்லமைப்பில் இருந்திருக்க வேண்டும் என்பது அவர் முடிவு. தற்காலத்தில் மலையாள மொழியில் உந்து உந்நு ஆக மாறியதைச்

சுட்டுகிறார். இவ்விகுதி புறநானூற்றில் 7 புலவர்களால் பயன் படுத்தப்படுவதை எடுத்துக்காட்டிப் புறநானூற்றின் காலத்தை அறுதியிடுகிறார். உந்து என்பது பெயரெச்சமல்ல என்பதையும் அது வினைமுற்று விகுதிதான் என்பதையும் நிறுவுகிறார். அவ்விகுதி புறநானூற்றில் காணப்படுவதாலும், தொல்காப்பியர் உந்தீற்று விகுதிகளைப் பற்றி யாதும் கூறவில்லை என்பதாலும், புறநானூறு தொல்காப்பியத்திற்குக் காலத்தால் முந்தியது என நிறுவுகிறார். கோவூர்க்கிழார் காலத்தில் வழக்கிலிருந்த இவ் வினைமுற்று, தொல்காப்பியர் காலத்தில் இறந்தொழிந்தது என்கிறார். தொல்காப்பியம் சங்க இலக்கியங்களுக்குப் பின்னுதித்த நூலென்பது அவர் முடிவு. தமது ஆய்வுக் கருத்தை நிலைநாட்ட ஏனைய திராவிட மொழி வழக்குகளை அணுகுவது அவர்தம் ஒப்பீட்டு (ஒப்பிலக்கிய) ஆய்வு முறையையும் பன்மொழிப் புலமையையும் உணர்த்தும்.

கால ஆராய்ச்சிப் பணியில் அவரது முக்கியமான நூல் 'The Chronology of the Early Tamil என்ற ஆங்கில நூலாகும். இந்நூல் 1932 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக வந்தது. நான்கு பெருந்தலைப்புக்களும் எண்பத்தேழு உள் தலைப்புக்களும் கொண்டது இந்நூல். இதில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட திராவிடர்கள், அவர் பண்பாடு ஆகியவை பற்றிய ஆய்வுக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு, பழந்தமிழக மன்னர்களின் காலத்தை ஆராய்கிறார். சங்க இலக்கியம் கூறும் மன்னர்களைப் பத்துத் தலைமுறையினராக வரிசைப்படுத்துகிறார். இவ்வாய்வின் முடிவாகப் பத்துத் தலைமுறையினரின் காலம் கி. மு. 50 முதல் கி. பி. 200 வரையாகும் எனக் கூறுகிறார். தமது கருத்துக்களைப் பெரிப்புளூஸ், தாலமி போன்ற வரலாற்றறிஞர்களின் கருத்தோடு ஒப்புநோக்கி அறுதியிடுகிறார். சங்க இலக்கியத்தின் காலத்தைக் கி. பி. க்குத் தள்ளிக் கொண்டுவந்த இவருடைய ஆராய்ச்சி முடிவு தமிழறிஞர்கள் உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கால ஆராய்ச்சியில் இவ்வாய்வு ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் வின்சன்ட் சிமித் தமது 'Classical Indian History' என்ற நூலில் பிள்ளையவர்களின் இந்த ஆய்வுக் கருத்தின் பெருமையைச் சுட்டியுள்ளார்.

## சொற்பொருளாராய்ச்சிப் பணியில்

சொற்பொருளாராய்ச்சித் துறையில், பேராசிரியர் எழுதிய நூல் 'சில தமிழ்ச் சொல் ஆராய்ச்சி' என்பதாகும். இந்நூல்

பேராசிரியரின் மறைவிற்குப் பின் 1968 இல் வெளிவந்தது. இது கெ. என். சிவராஜபிள்ளை நினைவு மன்ற (சென்னை) வெளியீடு. சொல்லாராய்ச்சியில் மட்டுமன்றிச் சொற் பொருளாராய்ச்சியிலும் அவருக்கிருந்த ஈடுபாட்டை இந்நூல் உணர்த்துகிறது. இந் நூலின் சங்க இலக்கியச் சொற்கள் சில ஆராயப்படுகின்றன. அவற்றிற்குப் பண்டை உரையாசிரியர்கள் தரும் பொருள் விளக்கம், பதிப்பாசிரியர் கூறும் பொருள் ஆகியவற்றை மட்டும் வைத்துக் கொண்டு சொற்பொருளை அறுதியிடாமல், அச் சொற்கள் வழங்குமாற்றினை ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்து சொற்பொருளை அறுதியிடுகிறார். இக்கால மொழியியலார் சொல் வழக்காற்றினை வைத்துக் கொண்டு சொற்பொருள் காணும் முறையை அன்றே தமது ஆய்வில் பயன்படுத்தியுள்ள நிலை வியத்தற்குரியது. பண்டை நூலில் குறிப்பிட்ட சொல்லின் வழக்காற்றினை நோக்குவது மட்டுமன்றி, சங்கேதப் பொருள் தரும் சொற்களில் உலக வழக்கையும் கருத்தில் கொண்டுதான் பொருளை அறுதியிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். இவ்வாய்வில் புறநானூற்றில் பயிலும் சில சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பண்டை உரையாசிரியர்களும் உ. வே. சாமிநாதையர் போன்ற பதிப்பாசிரியர்களும் கூறிய பொருளை மறுத்து, அவற்றின் உண்மைப் பொருளை உணர்த்துகிறார். எழுபத்தொன்பது சொற்களைக் குறித்த நுண்ணிய ஆராய்ச்சியும், மேற்கோள் விளக்கமுறை, பொருள் விளக்கமுறை ஆகிய இரு கட்டுரைகளும் இந் நூலின்கண் இடம்பெற்றுள்ளன.

பேராசிரியர் சொற்பொருள் பற்றி எழுதிய ஒரு ஆய்வுக் கட்டுரை "தொல்காப்பிய உரிச்சொல்லாராய்ச்சி' என்பதாகும் இக்கட்டுரையைப் பற்றிய விவரம் ஒன்றும் தற்போது தெரிவதற் கில்லை. 'சில தமிழ்ச் சொல்லாராய்ச்சி' என்ற நூலில் "இவற்றை யெல்லாம் தொல்காப்பிய உரிச்சொல்லாராய்ச்சி யென்னும் வியாசத்தில் விரித்துக் கூறுவதனால் அங்கே இச்சொல்லின் பொருள் விளக்கத்தைக் கண்டு கொள்ளலாம்'' என்று ஓரிரு இடங்களில் (பக். 22, 25) பேராசிரியர் குறிப்பிட்டுள்ளதிலிருந்து இவரால் தொல்காப்பிய உரிச்சொல்லாராய்ச்சி என்ற ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டிருப்பதை அறியலாம்.

### அகத்தியர் ஒருவரா ? பலரா ?

ஆங்கிலத்தில் எழுதபெற்ற Agastia in Tamilland என்ற ஆராய்ச்சி நூல் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு. 1930 இல்

பேராசிரியர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோது வெளியிடப்பட்டது. ஒரு ஆராய்ச்சி நூல் எங்ஙனம் அமைய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நூல் விளங்குகிறது, பேராசிரியரின் பரந்துபட்ட அறிவிற்குச் சான்றாக உள்ள நூல்களுள் இதுவும் ஒன்று. இந்நூலின் மூலம் பேராசிரியரின் வடநூலறிவு, வரலாற்றறிவு, ஒப்பியலாய்வறிவு ஆகியவை தெள்ளிதின் புலனாகும். இதில் தமிழிலக்கியங்கள் அகத்தியரைப்பற்றிக் கூறும் கதைகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளை விளக்கமாகக் காட்டி அகத்தியர் ஒருவர் அல்லர்; பலர் என்பதை நிறுவுகிறார். இதற்குப் பல புராண நூல்களிலிருந்தும் அகத்தியர் கதைகளை எடுத்துக் காட்டி ஒப்பு நோக்குகிறார். அகத்தியர் கதை ஆரியர் வருகைக்குப், பின்னர்தான் தமிழகத்தில் அறியப்பட்டது என்ற கருத்தையும் வலியுறுத்துகின்றார். மேலும் வால்மீகி இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள கதையில் உள்ள முரண்பாட்டையும் சுட்டுகிறார். அகத்தியர் பார்ப்பன ஆரிய இனத்தவராக இருக்க வேண்டும் என்பதைச் சில புறநானூற்றுப் பாடல்களை வைத்துக்கொண்டு முடிவு செய்கிறார். மேலும் அகத்தியர் எழுதியதாகக் கருதப்படும் சில நூல்களிலிருந்து சில நூற்பாக்களை எடுத்துக்காட்டி, இவை தமிழ்ப் பற்றுடைய ஒருவரால் எழுதப் பட்டவையாக இருக்க முடியாது என்றும் முடிவு செய்கிறார்.

### மதிப்புரை எவ்வாறு அமைய வேண்டும்?

பேராசிரியர் வையாபுரி பிள்ளையின் பதிப்பு முயற்சியில் பூத்த முதல் மலர் மனோன்மணீயம் 1922 இல் வெளிவந்த இப் பதிப்பில் சிவராஜ பிள்ளையால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு ஆய்வுரையும் உள்ளது. இவ்வாய்வுரையில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் வரலாறு தெளிவாகக் கூறப்பட்டுள்ளதோடு, நூலமைப்பு, நூலமைப்பின் சிறப்பு ஆகியவை ஆய்வுக்கண் கொண்டு நோக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வுப் பேருரையானது ஒரு நூலிற்கு மதிப்புரை எங்ஙனம் அமையவேண்டும் என்பதற்கு முன்னோடியாக உள்ளது.

### திறனாய்வுப் பணியில்

கம்பனது பேரிதிகாசத்திற்குப் பாடல்களிலேயே பேராசிரியரால் செய்யப்பெற்ற இலக்கியத் திறனாய்வுக் கவிதை நூல் 'கம்பராமாயணக் கெஸ்துவம்' ஆகும். இந்நூல் 422 விருத்தங் களைக் கொண்டது. இதில் 105 பாடல்கள் செந்தமிழ்த் தொகுதிகளில் (26, 28, 29, 30) வெளிவந்தன! 1927 இல்

குமரன் பத்திரிகையின் (காரைக்குடியிலிருந்து வெளிவந்தது) ஆண்டு மலரில் முதல் பன்னிரண்டு பாடல்கள் வெளிவந்தன. இந்நூல் முழுமையாக வெளிவந்தது பேராசிரியரின் மறைவிற்குப் பின்னர்தான். 1979 இல் அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியிடான தமிழாய்வின் ஒன்பதாவது தொகுதி 'பேராசிரியர் கெ. என். சிவராஜ பிள்ளையின் நூற்றாண்டு நினைவு மலராக' மலர்ந்தது. இதில்தான் கம்பராமாயணக் கௌஸ்துவம் முழுமையும் முதன்முதலாக வெளியிடப்பெற்றது.

இந்நூலில் எடுத்துக்காட்டாகச் சேர்க்கப்பட்டுள்ள கம்ப ராமாயணப் பாடல்கள் 40. பிள்ளையவர்கள் கம்பர் பாடல்களை அப்படியே தரும்போது அவற்றை இரட்டைத்தலைப் புள்ளியிலும் (" ") அவற்றைச் சிறிது வேறுபடுத்தித் தரும்போது ஒற்றைத் தலைப் புள்ளியிலும் (' ') அமைத்துள்ளார். இதில் 10 படலங்கள் உள்ளன. அவையாவன ; முன்னுரைப் படலம், ஆக்கியோன் படலம், உவமைப் படலம், இயற்கை வருணனைப் படலம், கைமக்கட் படலம், மெய்ப்பாட்டு வருணனைப் படலம், சொல் நடை வனப்புப் படலம், புலமைத்திறன் படலம், அறவுரைப் படலம், கலி இலக்கணப் படலம், ஆனால் இத்திறனாய்வுப் பாடல்கள் எந்தக் காண்டம், எந்தப் படலம், எத்தனையாவது செய்யுளைச் சார்ந்தவை என்ற குறிப்பு இல்லை,

செந்தமிழில் கம்பராமாயணம் பற்றிய உரைநடையில் அமைந்த கட்டுரை ஒன்றையும் அவர் எழுதியுள்ளார்.

## நீதி இலக்கியப் படைப்பு

நீதி இலக்கிய வகையைச் சார்ந்த இரு நூல்கள் பேராசிரியரால் படைக்கப்பெற்றுள்ளன. இரண்டுமே கவிதை நூல்கள் ; இன்னும் அச்சேறாதவை. அவற்றுள் ஒன்று வாழ்க்கை நூல் அல்லது வாழ்க்கை வளாகம் என்பது. இந்நூல் திருக்குறள் பாங்கில் அமைந்தது ; குறள் வெண்பாவினால் ஆனது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களைப் பற்றியது, ஆறு இயல்களைக் கொண்டது. அவையாவன ; பொதுவியல், இல்லொழுக்கவியல், தன்னொழுக்கவியல், சமுதாய ஒழுக்கவியல், இயற்கையியல், ஒழிபியல். இதில் 160 அதிகாரங்கள் உள்ளன. மொத்தக் குறட்பாக்கள் 2118. அதிகாரங்கள் பல்வேறு எண் தொகைகளில் பாடல்களைக் கொண்டவை. அதாவது, அதிகாரங்கள் ஐந்து பாடல்களைச் சிற்றெல்லையாகவும், முப்பது பாடல்களைப் பேரெல்லையாகவும் கொண்டுள்ளன.

நீதியைப் போதிக்கும் மற்றொரு கவிதை நூல் உலக வாழ்க்கை என்பதாகும். இந்நூல் தாழிசை நடையில் அமைந்தது. 48 பாடல்களைக் கொண்டது. இதனை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார் பேராசிரியர். முதல் பகுதியான உலகப்பொய் வாழ்க்கை என்பது 18 பாடல்களைக் கொண்டது. 21 பாடல்களைக் கொண்டது மெய்வாழ்க்கை என்ற பகுதி. மூன்றாவது பகுதி வாழ்க்கை வகுத்துரை. இதில் 9 பாடல்கள் உள்ளன. 'உலகத்தொழில் விண்டு சுயநலம் கருதல்', 'உலகத் தொழிலைக் கொண்டு சுயநலம் கருதல்' என்பனவற்றை நீக்க வேண்டும் என்று கூறும் பேராசிரியர் பொதுநலம் கருதலே சிறந்தது என்ற உண்மையை எடுத்துரைக்கின்றார்.

## ஞானாசிரியனாக

ஞானத்தைக் கற்பிக்கும் கவிதை நூல் 'புது ஞானக்கட்டளை'. இந்நூல் இன்னும் அச்சேறவில்லை. இக்கவிதை நூல் 13 பாடல்களைக் கொண்டது. ஞானப்பொருளை உலக வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் கூறுவதாக அமைந்துள்ளது.

## இயற்கையைப் பரவும் கவிஞராக

இயற்கையை இரசித்து மெய்மறந்த நிலையில் பேராசிரியர் மூன்று கவிதை நூல்களைப் படைத்துள்ளார்.

1. இயற்கைப் பாவினமும் சில்லறைப் பாக்களும்
2. இயற்கை நலம் அல்லது அழகு முப்பது
3. மேக மாலை

இதில் முதல் இரண்டு நூல்களும் அச்சேறாதவை.

'இயற்கைப் பாவினமும் சில்லறைப் பாக்களும்' என்ற கவிதை நூலில் மொத்தம் 29 பாடல்கள் உள்ளன. இயற்கைப் பொருள்களின் அழகைப் பாராட்டிப் பாடிய பாடல்களையும் பல்வேறு பொருள்களைப் பற்றிய பாடல்களையும் கொண்டது இந்நூல்.

'இயற்கைநலம் அல்லது அழகு முப்பது' என்ற நூலில் இயற்கைப் பொருள் காட்சிகளை இரசித்து வருணிப்பதாக அமைந்துள்ளன. சந்த நடையில் பாடப்பெற்ற இக்கவிதைகள் விருத்தப்பாக் கவிதைகள். இதில் மூன்று பகுதிகள் உள்ளன. முதல் பகுதியான இயற்கை நலம் பெருமிதத்தில் 13 பாடல்கள் உள்ளன. 12 பாடல்களைக் கொண்ட இயற்கைநல இன்பம் இரண்டாவது

பகுதியாக விளங்குகின்றது. மூன்றாவது பகுதி இயற்கை நல்லொழுக்கம் என்பதாகும். இதில் ஐந்து பாடல்கள் உள்ளன.

நெல்லைச் செந்தமிழ் மாலை வரிசையில் பூத்த முதல் மலர் மேகமாலை 1927 இல் வெளிவந்தது. இது ஒரு சந்தக் கவிதை நூல். இதில் மொத்தம் ஐம்பது சந்தங்கள் ஆளப்பட்டுள்ளன. ஒரே பாடலில் பல சந்தங்கள் விரவி வந்துள்ள நிலையும் காணப் படுகிறது. இயற்கைப் பொருளான மேகத்தை வருணிப்பதாகக் கவிதைகள் அமைந்துள்ளன.

## குழந்தைக் கவிஞராக

குழந்தைகளுக்கெனக் கவிதைகளை இயற்றுவதிலும் பேராசிரியர் தமது ஆர்வத்தைப் புலப்படுத்தியுள்ளார். அத்தகைய கவிதை நூல்களுள் ஒன்றான 'நாட்டுக் கண்மணிகளும் சந்தப் பாக்களும்' என்பது இன்னும் வெளியிடப்படாத கவிதை நூல். இதில் பாடப்பட்டுள்ள பாடல்கள் மொத்தம் 26 தலைப்புக்களின் கீழ் அடக்கப்பட்டுள்ளன. நாட்டுப்பற்று, சுதந்திர வேட்கை ஆகியவற்றை உணர்த்தும் பாடல்களே இல்லை.

சிறுபாமாலை என்பது ஒரு கவிதைத் தொகுப்பு நூல். இதில் சிவராஜபிள்ளை எழுதிய கவிதையுடன் தேசிக விநாயகம்பிள்ளை, தி. இலக்குமணபிள்ளை, பண்டித முத்துசாமிப்பிள்ளை, ஆகியோர் பாடிய குழந்தைக் கவிதைகளும் விளங்குகின்றன ஆராய்ச்சி அறிஞரான பேராசிரியர் ஒரு குழந்தைக் கவிஞராகவும் விளங்கினார் என்பதற்கு இவை நல்ல எடுத்துக்காட்டுக்கள்.

## மற்றும் சில கவிதைகள்

'இசைப் பாட்டுக்கள்' என்ற கவிதை நூலின் வாயிலாக, தம்மை ஒரு இசையியல் வல்லுநராக வெளிப்படுத்திக் கொள்கிறார் சிவராஜபிள்ளை. இன்னும் அச்சேறாத இக்கவிதை நூலில் தேசம், சமயம், ஒழுக்கம் இவை குறித்த மொத்தம் 42 பாடல்கள் உள்ளன. இப்பாடல்களில், அவை பாடப்படவேண்டிய இராகம், தாளம், மெட்டு ஆகிய குறிப்புக்களும் உள்ளன.

1935இல் வெளிவந்த ஒரு கவிதைத் தொகுப்பு நூல் 'நாஞ்சில் வெண்பா'வாகும். 240 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் இறுதியில் உரைக்குறிப்புப் பகுதியும் உண்டு. நாஞ்சில் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் அந்நாட்டு வளம், நாட்டு வரலாறு, சமூக நிலை ஆகியவற்றை இக்கவிதைகள் விளக்குகின்றன.

## காவியப்படைப்பு

'அருவியன் காதை' என்ற காவியம் 1922-23 ஆம் ஆண்டுச் செந்தமிழ் இதழில் (தொகுதி 21 பகுதி 21) வெளிவந்தது. கிரேக்கக் கவிதை ஒன்றினைத் தழுவி இயற்றப்பட்டது. 122 பாடல்களைக் கொண்டது. இதில் கவிதைகள் விருத்தப்பாவில் அமைந்துள்ளன.

## தமிழ்க்கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்

பேராசிரியர் 'தமிழ்க்கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்' என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார்கள். செந்தமிழில் இக்கட்டுரை வெளிவந்தது. கவிதை பற்றியும், கவிதை இன்பம் குறைவதற்கான காரணம் பற்றியும் கூறும் பேராசிரியர், கவிஞர்கள் கடைபிடிக்க வேண்டிய பண்புகள் பற்றியும் எடுத்துரைக்கிறார்.

## பதிப்புப் பணியில்

பேராசிரியர் ஆரம்ப காலத்தில் திருவனந்தபுரத்தில் இருந்த பொழுது யாழ்ப்பாணத்தில் திரு பொன்னம்பலம் இராமநாதன் தமிழ்ப்பணி யாற்றுவதற்காகப் பிள்ளையவர்களை இலங்கைக்கு அழைத்தார். அவரது மனைவியார் ஒரு அமெரிக்கர். அவர் கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். அம்மொழிப் பெயர்ப்பைச் செப்பம் செய்து பதிப்பிக்கும் பணியைத் தான் பிள்ளையவர்களிடம் ஒப்படைக்க அவர் விரும்பினார். அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் சென்ற பேராசிரியர் அங்கு ஓராண்டுக் காலம் தங்கித் தமது பணியைச் செவ்வனே நிறைவேற்றிய பிறகு தாயகம் திரும்பினார். அவரது தமிழிலக்கியப் புலமையும் ஆங்கில அறிவும் இப்பதிப்புப் பணிக்குத் துணை நின்றன.

## பத்திரிகைத் துறையில்

பேரா. சிவராஜப்பிள்ளையின் ஆர்வம் பத்திரிக்கைத்துறையின் பக்கம் திருப்புவதற்கு ஓரளவு தூண்டுகோலாக இருந்தவர் ஆர். சுப்பிரமணிய அய்யர். அரசுப் பணியிலிருந்து விலகிய பிறகு பிள்ளையவர்கள் திருவனந்தபுரத்தில் தலைமையலுவலகம் ஒன்றை நிறுவி. நாஞ்சில் நேசன் என்ற வாரப் பத்திரிக்கையை ஆரம்பித்தார். அதில் தாம் முன்னர்ப் பணியாற்றிய காவல் துறையின் ஊழல்களையும் நேர்மையற்ற செயல்களையும் துணிச்சலுடன் படம் பிடித்துக் காண்பித்தார். சிவராஜபிள்ளையின் திறமையைக் கண்ட பேராசிரியர் சுந்தரப்பிள்ளை, அவரைத்

தாம் நடத்தி வந்த 'பீப்பிள்ஸ் ஒப்பீனியன்' என்ற ஆங்கில வார இதழின் துணையாசிரியராகப் பணியமர்த்தினார். இங்ஙனம் பிள்ளையவர்களின் பத்திரிகைத் தொண்டு தொடர்ந்தது. பேரா. சுந்தரம்பிள்ளையின் மறைவிற்குப் பின் 'மலபார் குவார்டர்லி ரெவியூ' என்ற ஆங்கில முத்திங்கள் இதழையும் 'மந்திலி ரெவியூ' என்ற ஆங்கிலத் திங்கள் இதழையும் தொடங்கி நடத்தினார். தமது பத்திரிகைகளில் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றைத் தாமே எழுதி வெளியிட்டார். புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர்கள் பலருடைய கட்டுரைகளும் இவர் பத்திரிகைகளில் வெளிவந்தனவாகத் தெரிகிறது. யாழ்ப்பாணம் பொன்னம்பலப்பிள்ளை இராவணன் ஆரியனா? திராவிடனா? என்ற கேள்வியை இலக்கிய உலகில் முதலில் எழுப்பியது இவரது பத்திரிகையின் வாயிலாகத்தான். 1934 இல் சென்னைப் பல்கலைக் கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுப்பின்னர் ஜநமித்திரன் என்ற தமிழ்ப் பத்திரிகையும் அவரால் நடத்தப் பெற்றது.

## பிற துறைகளில்

தத்துவவியலில் பட்டம் பெற்ற பேராசிரியர் அத்துறையிலும் தமது ஆராய்ச்சியை நிகழ்த்தினார். பல தத்துவக் கட்டுரைகளையும் நூல்களையும் அவரால் படைத்தளிக்க முடிந்தது. அவரது தத்துவக் கருத்துக்களுக்கு மேனாட்டில் நல்ல வரவேற்பிருந்தது. அயல்நாட்டுப் பத்திரிக்கைகள் அவரது தத்துவக் கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டன. 'Monist' பத்திரிக்கை அவற்றுள் ஒன்று.

Indian Objectives என்ற தலைப்பில் பேராசிரியரால் எழுதப்பெற்ற நூல் ஐந்து தத்துவக் கட்டுரைகளைக் கொண்டது. இந்நூல் அமெரிக்க நூல் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. இங்ஙனம் பிறநாட்டாராலும் அறிவு மேதையென ஒப்புக்கொள்ளப்பட்டவர் பிள்ளை.

'Indian Social idol-a review' என்ற 200 பக்க அளவிலான ஆங்கில நூலும் பேராசிரியரால் படைக்கப்பெற்றது. இந்நூலில் அவர் வருணாசாரத் தருமத்தை மிகக் கடுமையாக எதிர்த்ததோடு, இது பிற்காலத்தில் இந்தியாவை எப்படிப் பாதிக்கும் என்பதை விளக்குகிறார். இதுகுறித்து உலக அறிஞர்களின் கருத்துக்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

செய்க்குவார் பரோடா மன்னர் 'caste' என்ற பொருள் பற்றி அறிவித்திருந்த கட்டுரைப் போட்டியில் பேராசிரியர் கலந்து கொண்டு முதற் பரிசையும் பெற்றார். இந்தப் போட்டியில் இந்திய அறிஞர்களுடன் உலக அறிஞர்களும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பரிசு உலக அறிஞர்களிடையே அவருக்குப் புகழ் பரவ ஒரு காரணமாயிற்று.

இங்ஙனம், தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியில் மட்டுமன்றி, கவிதைத் துறையிலும், தத்துவத் துறையிலும் தமது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தியுள்ளார் பேரா. சிவராஜ பிள்ளை. ஆராய்ச்சி எங்ஙனம் அமையவேண்டும் என்பதற்கு அவர் கையாண்டுள்ள முறைகள் நல்ல எடுத்துக்காட்டு. ஆராய்ச்சியை அறிவியல் நோக்குடன் நடத்திக் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னோடியாகத்திகழ்கிறார் பேராசிரியர் சிவராஜபிள்ளை.

---

**பதிப்பாசிரியர் குறிப்பு :**

இக்கட்டுரையின் 'கால ஆராய்ச்சிப் பணியில்' (பக் - 388) என்ற பகுதியில் 'உந்து' என்பது வினைமுற்று விகுதி, அது புறநானூற்றிற் காணப்படுகின்றது. மலையாளத்தில் இச்சொல் 'உந்து' எனமாறியுள்ளது. தொல்காப்பியம் இவ்விகுதி பற்றிக் கூறவில்லை, எனவே அது புறநானூற்றிற்குப் பிற்பட்டது. என, சிவராசப்பிள்ளை தனது 'உந்து என்னும் இடைச்சொற்பிரயோகம், என்னும் கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார். என இக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். பிள்ளையார் காலத்தில் தொல்காப்பியம் பெரிதும் பயிற்சியிலில்லை. ஆழ்ந்த ஆய்வுரைகளும் தோன்ற வில்லை எனத்தெரிகின்றது.

தொல்காப்பியம் வினைகட்கெல்லாம் பொதுச்சொல் லாகிய செய் என்பதன்கண் இணைந்த உம்மீற்றின் திரிபாக உந்து என்னும் விகுதி வரும் என்பதனை 'உம் உந்தாகும் இடனுமாருண்டே" (இடை - 44) என்னும் சூத்திரத்தாற் கூறுகின்றது. செய்யும் என்னும் முற்றுத், தன்மையிலும் முன்னிலை யிலும் பல்லோர் படர்க்கையிலும் வராது. செய்யும் என்னும் எச்சம் ஐம்பால் மூவிடத்தும் வரும் என்பது தமிழ் இலக்கண மரபு' புறநானூற்றுள் வரும் பாயுந்து, தூக்குந்து, தருஉந்து

முதலியவற்றைமுற்றுவினையாகப் பிறழக்கருதுவார் பலர். அப்பாடல் களை நன்கு நோக்கின் அவை பெயரெச்சமாக நின்று பெயரொடு முடிந்துள்ளமையைக் காணலாம். மலையாளமொழி, செய்யும் என்ப தனை ஐம்பால் மூவிடத்தும் முற்றாகவே கொண்டு வழங்கும் முக்கொலிமிக்க மலையாளமொழி மெல்லின மெய்யீற்றுச் சொற் களுக்கும் உகரத்தை விடுப்பொலியாகக் கொள்ளும். அம்முறையிற் செய்யும் என்பது செய்யுந்நு எனவழங்கும். அறிவியல் நோக்கமைந்த தொல்காப்பிய விதிகளைக் கடந்த பல சொற்களைச் சங்கப்பாடல்களில் காணலாம். அது காரணமாகப் புறநானூற்றிற்குக் காலத்தால் தொல்காப்பியம் பிற்பட்டது எனக் கருதுவது தகவாகாது.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## எவ்வழி நல்லவர் ஆடவர்

டாக்டர். பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

### 5. வீரமும் வீரத்தோடு தொடர்புடைய பெயர்களும்

சங்க இலக்கியத்தில் 'ஆடு' எனும் சொல் சமைத்தல், ஆடுதல், அசைதல், இயங்குதல், பூசுதல், விளையாடல், கொல்லுதல், ஆடு, எனும் பல்வேறு பொருளில் வந்திருப்பதுடன் 'வெற்றி' எனும் பொருளிலும் வந்துள்ளது. புறநானூற்றில் இச்சொல் 26 இடங்களில் வந்துள்ளது. வெற்றி எனும் பொருளில் மட்டும் 10 இடங்களில் வந்துள்ளது. புறநானூற்றில் வரும் 'ஆடுமின்' (புறம். 97) 'ஆடிய' (புறம். 373) எனும் சொற்கள் முறையே போர்செய்மின், வென்ற எனும் பொருள்களில் வந்துள்ளது.

ஆடு என்பது வெற்றி, போர் என்பனவற்றோடு தொடர்புடையதாய் இருத்தலால் வெற்றியைத் தேடிவரும் வல்லமை படைத்தவனாகக் கருதப்பட்ட தலைவனே முதலில் ஆடவன் என அழைக்கப் பட்டிருத்தல் வேண்டும். அச்சொல்லே பின்னர் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களால் போரோடு தொடர்புடைய வீரரையும் ஆண்மக்களையும் ஆறலைக்கள்வரையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

'ஆடா டென்ப வொருசா ரோரே
ஆடன் றென்ப வொருசா ரோரே
நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்திநின்
றியான்கண் டனனவ னாடா குதலே'' (புறம். 85)

இப்பாடலிலே வரும் அவன் ஆடாகுதல் என்பதனை மாற்றி ஆடவன் ஆகுதல் என்று கொண்டு வெற்றிக்குரியன் ஆதலைக் கண்டேன் எனவும் பொருள் கொள்ளலாம்.

இங்கே நாம் வீரத்தோடு தொடர்புடைய பிறசொற்களின் அடியாகப் பிறந்ததும் அரசரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதுமான பெயர்களையும் எண்ணிப் பார்க்கவேண்டும். 'பொரு' என்பதன் அடியாகத்தோன்றிய 'பொருநன்' என்பதையும் 'வலிமை'

எனும் பொருளுடைய 'முன்பு' என்பதன் அடியாகத்தோன்றிய 'முன்பன்' எனும் சொல்லையும் சங்க இலக்கியத்தில் காணலாம். இச்சொற்களும் அரசரைக் குறிக்கக் கையாளப்பட்டுள்ளதைப் புறநானூறு காட்டுகின்றது.

'செருமாண் பஞ்சவ ரேறே நீயே
அறந்துஞ் சுறந்தைப் பொருநனை'' (புறம். 58)

இதற்கு உரையாசிரியர் 'நீ அறந்தங்கும் உறையூரின்கண் அரசன், என்றே பொருளெழுதுகின்றார்.

''கனவி னரியன காணா நனவிற்
செருச்செய் முன்பநின் வருதிற னோக்கி
மையல் கொண்ட வேமமி லிருக்கையர்'' (புறம். 41)

இப்பாடலில் வேந்தன் ஒருவன் போர் செய்யும் வலிமையுடையோய் என விளிக்கப்பட்டுள்ளான். இத்தகு சொற்களைப் போன்றே வெற்றி, வெல், போரிடு எனும் பொருள்கொண்ட 'ஆடு' என்பதன் அடியாகத் தோன்றிய 'ஆடவர், என்பதும் மன்னரைக் குறிக்கக் கையாளப்பட்டுள்ளது.

## 6. கிழமையும் கிழமைப் பெயர்களும் (உடைமைப் பெயர் களும்)

வீரத்தோடு தொடர்புடைய சொற்களின் அடியாகத் தோன்றிய மேற்கண்ட பெயர்களுடன் அரசரைக் குறிக்கக் கையாளப்பெற்ற பிற பெயர்களையும் ஒப்பிட்டு ஆராய்கின்ற போதுதான் சங்கச் சமுதாயத்தில் விளைந்த மாற்றங்களையும் புரிந்து கொள்ள முடிகின்றது. இறைவன், கோ, காவலன், அண்ணல், தலைவன், கோமான், குருசில் எனும் பெயர்கள் ஒருபுறம் இருக்க நாடன் (பெருங்கல்நாடன், மலைநாடன், கான்கெழு நாடன்), காவிரிக்கிழவன், மலைகிழவன், நாடுகிழவோய், எனும் கிழமைப் பெயர்களுடன் மன்னர் வேந்தர், சீறூர் மன்னர், தண்ணடை மன்னர் குறுநில மன்னர், என்பனவற்றையும் இணைத்து ஆய்தல் வேண்டும். அவ்வாறு ஆராய்கின்ற பொழுதுதான் உடைமை அல்லது கிழமைத்தன்மைகளால் பெயர்வைப்பு முறையிலேயும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளதை உணர்ந்து கொள்ளமுடியும்.

சங்கப் பாடல்கள் குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்கள் வன்புலக் குழுச்சமுதாயங்களின் அழிவையும் வேந்தரின் மருதநிலச் சமுதாயங்களின் வளர்ச்சியையும் தெளிவாய்க் காட்டுகின்றன. வன்புலச் சமுதாயத் தலைவர்களான சீறூர்மன்னர்கள்

உடைமை இல்லாதவராய், ஊரின் நலன் பேணுதலை மட்டுமே நோக்கமாய்க் கொண்ட போர்க்காலத் தலைவர்களாய், பகிர்ந்துண்டு வாழும் பண்பினராய் ஊர்ப்பசியைப் போக்கி வேந்துவிடு தொழில்மேற் சென்ற தன்மையராய்க் காணப்பெறுகின்றனர். சிறூர்மன்னரின் தலைமை உடைமைகளை அடியயொற்றியதாக இல்லாமல் ஊர்நலனை-பொதுநலனை அடியயொற்றியதாகவே உள்ளது.

மருதநிலச் சமுதாயத்தலைவர்களான வேந்தர்களின் இயல்பு இதனின்றும் முற்றிலும் மாறுபட்டதாய்க் காணப்படுகிறது. உடைமைப் பெருக்கமே இவர்களின் உயிர்ப்பண்பாய்க் காணப் படுகின்றது.

''தொல்நிலக் கிழமை சுட்டின் நல்மதி
வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த
பசுமண் குருஉத் திரள்போல அவன்
கொண்ட குடுமித்து இத்தண்பணை நாடே'' (புறம். 32)
''நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே'' (புறம். 35)
''மண் ஆள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மல்'' (புறம். 47)
''நின்பெருஞ் செல்வம் யார்க்கு எஞ்சுவையே''
(புறம். 213)

என இவர்களிடத்தே உடைமை உரிமைத் தன்மைகள் மேலோங்கி நிற்கின்றன. நிலனாள்தல் என்பதைத் தமக்கே உரியதாய்ப் பழங்காலந்தொட்டு வழிவழியாய் வரும் தன்மையதாய்க் காட்டி உடைமைப் பழமையை நிலைநாட்ட முனைகின்றனர். இத்தகைய நிலக்கிழமைகளை நிலஉடைமைகளை வெளிக்காட்டும் வகையில் இவர்கள் நாடன், நாடுகிழவோன், கானகநாடன், காவிரிக் கிழவன் எனும் கிழமைப்பெயர்களால் அழைக்கப் பெறுகின்றனர்.

தம்மை ஏனையோரினின்றும் வேறுபடுத்தி உயர்த்திக் காட்டிக் கொள்ளும் பொருட்டு முரசு, வெண்கொற்றக்குடை, உரிமைப் பூமாலை(போந்தை, வேம்பு, ஆர்)இவற்றை அடையாளச் சின்னங் களாய்க் கொண்ட இவர்களின் நோக்கமெல்லாம் மருதநிலத் தலைமை என்பதுதான். மூவேந்தரைப் பற்றிய போர்ப்பாடல்கள் பலவும் மருதநில விளைவயல்களின் அழிவையே பெரிதும் பாடு கின்றன. மகட்பாற் காஞ்சிப்பாடல்கள் மருதநிலக் கொள்ளையை மையமாகக் கொண்டுள்ளன. மருதநிலத் தலைமைதான் நண்ணி

யாளும் தன்மைக்கு ஏதுவாய் அமையவல்லது என்பதைப் புலவர்களும் எடுத்துரைக்கின்றனர்.[29] காடு கெடுத்து நாடாக்கிக் குளந் தொட்டு வளம்பெருக்கி நிலவளன் நீர்வளனைப் பெருகச் செய்ததைப் பட்டினப்பாலை (283, 84) கூறுகின்றது. மருதநிலத் தலைமையே தங்களின் மேன்மைக்குரியவழி என்பதனை உணர்ந்து செயல்பட்ட இவர்கள் தங்களின் மருதநிலத்தலைமையை வெளிப் படுத்தும் வகையில் 'வேந்தர்' என அழைக்கப் படுவதையே[30] பெரிதும் விரும்பியிருக்கின்றனர்.

வேந்தர், வேந்தன், வேந்து என்பன புறநானூற்றில் ஒருசில இடங்களைத்தவிர (புறம் 22, 156, 186) ஏனைய இடங்களில் பெரும்பாலும் (குறிப்பாகவோ அல்லது வெளிப்படையாகவோ) மூவேந்தரை மட்டுமே குறிக்கக் கையாளப்பட்டுள்ளன, மன்னன் என்பது ஓரிடத்தில் சேரமான் பெருஞ்சேரலாதனையும்[31] மன்னர் என்பது ஓரிடத்தில் குறிப்பாக மூவேந்தரையும் குறித்துவந்துள்ளது. இவ்விடத்தும் இவர்கள் மருதநிலத்தலைமை வெளிப்படும் வகையில் தண்ணடைமன்னர்[32] என்றே அழைக்கப்பெற்றுள்ளனர்.

இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்குப்பொழுது நிலக்கிழமை அல்லது நிலவுடைமை என்பது தோன்றியபின்னர் மருதநிலத் தலைமையின் மேன்மை உணரப்பட்டபின்னர் மூவேந்தர் தங்களைக் கிழமைப் பெயர்களளாலும் மருதநிலத் தலைமையை வெளிப்படுத்தும் பெயர்களாலும் அழைக்கப்படுதலையே விரும்பி யிருக்கின்றனர் என்பது புலனாகிறது. உடைமை வளர்ச்சி இங்கே பெயர் வைப்பு முறையிலேயும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

## 7. சொற்பொருளும் சங்கச் சமூகப் பின்னணியும்

உரையாசிரியர் தான் வாழ்ந்த காலத்தே ஆடவர் எனும் சொல்லுக்கிருந்த ஆண்மக்கள் எனும் பொருளை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியத்தே வரும் இச்சொல்லுக்கும் சூழலை உணராது, சங்கப் பாடுபொருளின் தன்மைகளையும் சங்கச்சமூகப் பின்னணியையும் ஆராயாது ஆண்மக்கள் எனவே பொருள் எழுதியுள்ளார். மூலவிலக்கியங்களில் முழுக்கவனத்தையும் செலுத்திச் சங்கச்சமுதாயத்தையும் சங்கப்பாடல் மரபுகளையும் உணர்ந்து ஆராயும்போதுதான் சிலசொற்களுக்கான உண்மைப் பொருளையும் பொருள்வளர்ச்சியையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

## 7. 1. சங்கச் சமூக மாறுபாடும் புலவர்களின் இருவேறு நிலையும் ; நாடாள்வோர் பால் நன்மை வற்புறுத்தலும்.

சங்ககாலம் 'இனக்குழு வாழ்க்கை அழிந்து நிலவுடைமையாக மலரும் காலகட்டத்தைக் குறிக்கிறது'. இக்காலகட்டத்தில் புலவர்கள் இருவகைப் பட்டுப்போகின்றனர். ஒருசாரார் மருதநிலச் தலைவர்களான வேந்தர்களின் நிழலில் வாழத்தலைப்பட்டு அவர்களின் மேம்பாட்டுக்கான வழிகள் பலவற்றையும் அறிவுறுத்துவதுடன் அவர்களின் புகழ்பாடித் திரிந்த பிரச்சாரகர்களாகவும் உள்ளனர். பிறிதொரு சாரார் அழிந்துபட்டு வரும் சீறூர் மன்னர், குறுநில மன்னர் ஆகியோரின் நல்லியல்புகளை, கொடைமாண்பினை இவர்கள்பாலும் எதிர்பார்ப்பவராய் உள்ளனர். வரையறுத்ததும் பயன்கருதியதுமான வேந்தர்களின் கொடையால் ஒதுக்கப்பட்ட புலவர்பலர் வறுமைநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வேந்தர்களின் உடைமைவளர்ச்சியால் புறக்கணிக்கப்பட்ட புலவர்களிடத்தே

''வேந்தர் நாணப் பெயர்வேன்'' (புறம். 161)

''ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது
இல் என மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ் குறைபடூஉம் வாயில்'' (புறம். 196)

''மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே
எம்மால் வியக்கப் படூஉமோரே
... ... ...
புன்புல வரகின் சொன்றியொடு பெறாஉம்
சீறூர மன்னர் ஆயினும் எம்வயின்
பாடறித் தொழுகும் பண்பினோரே'' (புறம். 197)

''மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்
நல்லறிவு உடையோர் நல்குரவு
உள்ளுதும்'' (புறம். 197)

''இன்னும் தம்என எம்மனோர் இரப்பின்
முன்னும் கொண்டிர் என நும்மனோர் மறுத்தல்
இன்னாது அம்ம'' (புறம். 203)

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதெனதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
... ... ...
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர் வேட்டோரே
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல ஆகும்." (புறம். 204)

"பெரிய வோதினும் சிறிய உணராப்
பீடின்று பெருகிய திருவின்
பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே" (புறம், 375)

"வான் அறியல என் பாடுபசி போக்கல்
அண்ணல் யானை வேந்தர்
உண்மையோ அறியல் காண்பு அறியலரே"
(புறம். 390)

என்பன போன்ற குரல்கள் மேலோங்கி ஒலிக்கின்றன.

இத்தகைய காலகட்டத்தில் உடைமைப் பெருக்கத்திற்கு முற்றிலுமாக ஆளாகிப்போன வேந்தர்களிடம் நாடாள்வோருக்கு இருக்கவேண்டிய தன்மைகள் இவை என்பதும் அவர்கள் நல்லவராய் இருக்கவேண்டியதன் தேவையும் வலியுறுத்தப்படு கின்றன. ஔவையின் பாடலும் இத்தகையதொரு பாடல் மரபுக்கு உட்பட்டதாகவே உள்ளது. நாட்டுநலன் அரசனின் நல்லியல்புகளால் அமைவது என்பது இப்பாடலாலும் அறிவுறுத்தப் பெறுகிறது. எனவே இப்பாடலில் வரும் ஆடவர் என்பது மன்னரைக் குறித்து நிற்றலே ஏற்புடைத்தாகின்றது.

## 7.2 சங்கப்பாடல் மரபுக்கேற்பப் பொருள் கொள்ளல்

ஒரு வீரனின் மறமாண்புகளைக்கூடப் பலபட்டப்பாடுகின்ற வீரயுகக் காலகட்டத்தில் ஒரு மன்னன் ஆடவரை வென்றான் எனப்பாடுகின்ற பொழுது சங்கப்பாடல் மரபுகளுக்கு ஏற்பவும் பாடப்பட்ட மன்னனின் வீரமாண்புகளுக்கு ஏற்பவும் அரசரை வென்றான் எனப் பொருள்கொள்வதுதான் வீரயுகப் பாடல் மரபுகளை பாடற் பொருண்மைகளைப் பின்பற்றியதாக இருக்கும்.

## 7. 3. சீறூர் மன்னரும் வீரம் சார்ந்த பெயர்களும் :

இனக்குழுச் சமுதாயத் தலைவன் (சீறூர் மன்னன்) உடைமை இல்லாதவனாகவும் பொதுநலனை மட்டுமே கருத்திற்கொண்டு

தனது வீரத்தால் ஊர்நலனைப் பேணும் இயல்பினனாக உள்ளான். உடைமைத் தோற்றமில்லாக் இக்காலச் சூழலில் சமுதாய நலன் பேணி வெற்றியைத் தேடித்தந்த தலைவன் வெற்றிக்குரியன் என்ற பொருளில் ஆடவன் என்றழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். 'புல்லணற்காளை' (புறம். 258), 'வென்வேள் விடலை' (261), 'கடுமான் தோன்றல்' (265), 'மறம்புகல் மைந்தன்' (271), 'பெருந்தகை மறவன்' (274,) 'பெருஞ்செயலாளன்' (282). 'வேலோன்' (322), 'செருவெங்குருசில்' (321), 'சீறூர் மதவலி' (331) 'உரவுவேல் காளை' (334) என வீரத்தோடு தொடர்புடைய பெயர்களால் மட்டுமே இச்சமுதாயத் தலைவர்கள் அழைக்கப் பட்டிருத்தலை இங்கே நினைவிற்கொள்ள வேண்டும். உடைமைப் பெயர்களை இங்கே காண இயலவில்லை.

## 7.4. வேந்தரும் உடைமைப் பெயர்களும்

மருதநிலச் சமுதாயத் தலைவர்களான வேந்தர்களிடத்தே எதிலும் உடைமைப்பண்பே மேலோங்கி நிற்கின்றது. எதிலும் தம்மை உயர்ந்தோராய்க் காட்டிக் கொள்ள விழைந்த வேந்தர்கள் பெயர்வைப்பு முறையிலேயும் மாற்றம் வேண்டித் தங்களின் உயர்வைப் புலப்படுத்தும் கிழமைப் பெயர்களால் அழைக்கப் படுதலையே விரும்பியிருக்கின்றனர். மருதநிலப்பெருக்கத்தில் பேரார்வம்கொண்ட இவர்கள் தங்களின் மருதநிலத்தலைமைகள் வெளிப்படும் வகையில் தண்ணடைமன்னர், வேந்தர் என்ற பெயர்களால் அழைக்கப்படுதலையே விரும்பியிக்கின்றனர். அவ்வாறே அழைக்கப்பட்டுள்ளனர். உடைமைப்பண்புகள் முனைப்புற்ற சூழலில் வீரம் சார்ந்த பெயர்கள் பின்னுக்குத் தள்ளப்பெற்று உடைமை சார்ந்த கிழமைப் பெயர்கள் ஆளுமை பெறத்துவங்கியுள்ளதை இப்பெயர் வைப்புமுறைகள் தெளிவாய்க் காட்டுகின்றன.

## 8. ஆடவர் ஆள்பவரே

இதுவரை ஆய்ந்தவற்றை ஒருங்கே நோக்குகின்ற பொழுது சங்ககாலம் வன்புலச் சமுதாயத் தலைவர்களின் குழுத்தலைமை மறைந்து மென்புலச் சமுதாயத் தலைவர்களான வேந்தர்களின் உடைமைத் தலைமைகளின் தோற்றுவாய்க் காலமாய் இருத்தல் புலனாகின்றது. இவ்வுடைமைச் சமுதாயத் தோற்றத்தால் பாதிப்புக் குள்ளான புலவர்களின் பாடல்களில் வீரஞ்சார்ந்த பெயர்களால் அழைக்கப்பட்ட சீறூர் மன்னரின் குழுவாழ்வு மேன்மைகளும் வீரத்தை மட்டுமே உடைமையாய்க் கொண்டு குழுவைப் பாது காத்த அவர்களின் மேன்மைகளும் பலப்படப் புகழப்படுகின்றன.

உடைமைப் பெருக்கத்தையும், மருதநிலக் கொள்ளையையும் நோக்கமாய்க் கொண்டு வரையறுத்த, மறுமைப் பயன்கருதிய கொடைப் பண்பை மேற்கொண்ட வேந்தர்பால் நாடாள்வோருக்கு இருக்கவேண்டிய குடிபேணும் நற்பண்புகள் வலியுறுத்தப் படுகின்றன. இத்தகு சூழலில் நாடாள்வோர்பால் நல்லியல்பை வற்புறுத்தும் பாடல்கள்பல தோன்றுகின்றன. இப்பாடல்களில் ஒன்றாகவே 'எவ்வழி நல்லவர் ஆடவர்,' எனும் பாடலும் விளங்குகிறது.

இவ்வாறு நிலவுடைமைப் பண்பு மேலோங்கிய சமுதாயச் சூழலில் பெயர் வைப்பு முறையிலேயும் மாற்றங்கள் நேர்கின்றன. வீரஞ்சார்ந்த பெயர்களால் அழைக்கப்பட்ட குழுச்சமுதாய நிலைமை மாறி உடைமைப் பெயர்களால் மட்டுமே அழைக்கப்படும் மருதநிலச் சமுதாயப்பண்பு, உடைமைச் சமுதாயப்பண்பு மேலோங்கி நிற்கின்றது. இக்காலச் சூழலில் வீரஞ்சார்ந்த பெயர்கள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன.

விடலை, தோன்றல், மைந்தன், மறவன், வேலோன், வெங்குரிசில், மதவலி, காளை என்பன போன்ற வீரஞ்சார்ந்த பெயர்களால் தலைவர்களை அழைத்த நிலைமை மாறி நாடன், ஊரன், நாடுகிழவோன், மலைகிழவோன், காவிரிக்கிழவன் என உடைமைப் பெயர்களால் அழைக்கும் நிலை நேர்கிறது. இத்தகு காலச்சூழலில் வேந்தர்கள் ஒருசில இடங்களில் பொருநன், முன்பன் என்ற வீரஞ்சார்ந்த பெயர்களாலும் விளிக்கப்படுகின்றனர். இவ்வுடைமைச் சமுதாயச் சூழலில் எஞ்சி நின்ற, ஆள்பவரைச் சுட்டும் வீரஞ்சார்ந்த பெயர்களில் ஆடவர் என்பதும் ஒன்று. இது முதலில் ஆள்பவரைச் சுட்டிப் பின்னர், வீரர், ஆற்றலைக் கள்வர் போன்றோரையும் சுட்டல் கையாளப்பட்டுள்ளது. எனவே 'நாடா கொன்றோ, எனும் பாடலில் வரும் ஆடவர் என்பது ஆள்பவரைச் சுட்டி வந்துள்ளது. என்பதும் இப்பாடல் நிலவுடைமை மலர்ந்த சங்கச்சூழலில் ஆள்பவர் பால் இருக்க வேண்டிய தன்மையை வலியுறுத்துகின்றது என்பதும் தெளிவாகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. க. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், பக். 21, 22
2 ஔவை துரைசாமிபிள்ளை, புறநானூறு (மூலமும் உரையும்), ப. 202
3. மேற்படிநூல், ப. 202

4. "சாறு... போரேயென்பது இழிந்ததன்மேல் வந்ததாலெனின் ஊசியினது விரைவு மற்றமுள்ள விரைவின் உயர்ந்ததாகலின் அதுவும் உயர்ந்ததாம்." (தொல். உவம. சூ. 3, இளம்.) புறநானூறு, உ. வே. சா. ப. 188

5. துடியெறியும் புலைய
எறிகோல் கொள்ளும் இழிசின (புறம். 287)
மடிவாய்த் தண்ணுமை யிழிசினன் குரலே (புறம். 289)
என்ற இடங்களில் வரும் புலையன் இழிசினன் எனும் சொற்களையும் ஒப்பிட்டு ஆய்தல் வேண்டும்.

6. புறநானூறு, கழகம், ப. 221

7. புறநானூறு, உ. வே. சா, ப.

8. ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம். 312)

9. என் சிறுவனைக், கால்கழி கட்டிலில் கிடப்பி, தூவெள்ளறுவை போர்ப்பித்திலதே (புறம். 286)
ஈன்ற வயிறோ இதுவே தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புறம். 86) ... 20

வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே (புறம். 277)
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே (புறம். 278)
எனும் தாய்மைக் கூற்றுகளையும் இங்கே இணைத்து நோக்க வேண்டும்.

10. கோ. கேசவன், மண்ணும் மனித உறவுகளும், ப. 4

11. இளநீர் உதிர்க்கும் வளமிகு நல்நாடு
பெற்றனர் உவக்கும் நின் படைகொள் மாக்கள்
பற்றா மாக்களின் பரிவு முந்துறுத்து
கூவை துற்ற நாற்கால் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையின் ஒரீஇ வருநர்க்கு
உதவி ஆற்றும் நண்பின் பண்புடை

ஊழிற்றாக நின் செய்யை (புறம். 29)
மேலும் காண்க புறம். 285.

12. உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன் (புறம். 95)
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கை வண்மையே (புறம். 106)
மூவருள் ஒருவன் துப்பு ஆகியர் என
ஏத்தினர் தருஉம் கூழே நும்குடி
வாழ்த்தினர் வருஉம் இரவலரதுவே (புறம். 122)
இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன் (புறம். 134)
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடை மடம் படுதல் அல்லது
படைமடம் படான் பிறர்படை மயக்குறினே (புறம். 142)
பெறுதற்கு அரிய வீறுசால் நன்கலம்
பிறிது ஒன்று இல்லை காட்டு நாட்டேம் என
மார்பில் பூண்ட வயங்குகாழ் ஆரம்
மடைசெறி முன்கைக் கடகமொடு ஈத்தனன் (புறம். 150)
தன்மலைப் பிறந்த தாஇல் நன்பொன்
பல்மணிக் குவையொடும் விரைஇ கொண்ம் என
சுரத்திடை நல்கியோனே விடர்ச் சிமை
ஓங்கு இருங் கொல்லிப் பொருநன் (புறம். 153)

13. முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி (அகம். 209)

14. கொள்ளார் ஓட்டிய நள்ளியும் - என ஆங்கு
எழுவர் மாய்ந்த பின்றை, அழிவரப்
பாடி வருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கும் என விரைந்து இவண்
உள்ளி வந்தனென் (புறம். 158)
இரப்போர் கையுளும் போகி
புரப்போர் புன்கண் பாவை சோர

அம்சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன்
அரு நிறத்து இயங்கிய வேலே (புறம். 235)

பாடுநர்க்கு அருகா ஆஅய் அண்டிரன்
... ... ... ... ... ... ... ... ...
ஒள்ளெரி நைப்ப உடம்பு மாய்ந்தது
புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசியராகி, பிறர்
நாடுபடு செலவினர் ஆயினர், இனியே (புறம். 240)

15. புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக் (புறம். 27)
கேட்பல் எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி
இரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப் புணைபிறி தில்லை (புறம். 367)

16. இன்னா வாகப் பிறர்மண் கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே (புறம். 12)
பிறர் மண் உண்ணும் செம்மல் (புறம். 20)

17. நீயே தண்புனற் காவிரிக் கிழவனை (புறம். 58)

18. மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே (புறம். 47)

19. புறம். 27
புறம். 28

20. ஒல்லா தொல்லு மென்றலு மொல்லுவ
தில்லென மறுத்தலு மிரண்டும்
......... ......... .........
சேய்த்துக் காணாது கண்டனம் (புறம். 196)

மண்கெழு தானை யொன்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே (புறம். 197)
மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்தும்
உணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளேம் (புறம். 197)
ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்
வேல்கெழு குருசில் கண்டே னாதலின்
விடுத்தனென் வாழ்கநின் கண்ணி தொடுத்த
தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாகப்
பணித்துக்கூட் டுண்ணும் தணிப்பருங் கடுந்திறல்

நின்னோ ரன்னநின் புதல்வ ரென்றும்
ஒன்னார் வாட வருங்கலந் தந்தநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
முன்னோர் போல்கிவர் பெருங்கண் ணோட்டம்
... ... ...
இவர்பெறும் புதல்வர்க் காண்டொறும் நீயும்
புகன்ற செல்வமொடு புகழினது விளங்கி
நீடுவாழிய நெடுந்தகை யானும்
கேளில் சேய் நாட்டினெந் நாளும் (புறம். 198)

21. புறநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், பக். 3, 4,

22. பாட்டுடை மக்களாகிய அரசர்கள் குறுநிலமன்னர்கள் கிழார்கள் ஆகியோரின் அடிப்படையில் தொகுக்கப் பட்டதாகவும் தெரிகிறது. புறம். 2. 85 மூவேந்தர்கள், 87 - 181 குறுநில அரசர்கள், 196 - 229 மூவேந்தர்களும் குறுநில அரசர்களும் கலந்து வருதல்) பாடும் பொருள் கருத்துகளின் அடிப்படையில் வரிசைப் படுத்தியதாகவும் (கையறுநிலை 112-120, 217-227, 230-248) தெரிகிறது,

— மண்ணும் மனித உறவுகளும், ப. 7

23. கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினது படுமே
உய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலை தருமே (புறம். 185)

24. நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால் யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே (புறம். 186)

25. வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
......... ......... ......... .........
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே (புறம். 189)

26. யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை (புறம். 191)

27. கள்வர்-மதுரைக்காஞ்சி 642
ஆண்மக்கள்-பரிபாடல் திரட்டு 1.53
வீரர்-புறநானூறு 294.3
ஆறலைக்கள்வர்-குறுந்தொகை 274.4
கரந்தைவீரர்-அகநானூறு 131.9
கணவன்மார்-குறுந்தொகை 135.2
கிணறுவெட்டும் ஆடவர்-அகநானூறு 79.1
வெட்சிவீரர்-அகநானூறு 97 6
உப்புவணிகர்-அகநானூறு 207.4

28. மதுரைக்காஞ்சி, பத்துப்பாட்டு. உ. வே. சா., ப. 426

29. செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள் வலி முருக்கி
ஒருநீ ஆகல் வேண்டினும் சிறந்த
நல்இசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்
தகுதிகேள் இனி மிகுதியாளா
நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே
வித்தி வான் நோக்கும் புன்புலம் கண் அகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே அதனால்
... ... ...
நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே (புறம். 18)

30. வேந்துமேம் பட்ட பூந்தார் மாற (புறம். 55)
வேந்தென மொழிவோரவன் வேந்தென மொழிவோர்
(புறம். 377)
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே (புறம். 26)

31. தன்போல் வேந்தன் முன்புகுறித் தெரிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன் (புறம். 65)

32. பருத்தி வேலிச் சீறூர் மன்னன்

... ... ...

தண்ணடை மன்னர் தாருடைப் புரவி (புறம். 299)

**துணை நூல்கள் :**


1. **அகநானூறு** (மணியிடைபவளம், நித்திலக்கோவை), பொ. வே. சோமசுந்தரனார் (உரை), கழகம், சென்னை, 1973.
2. **குடும்பம் தனிசொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்,** பி. எங்கல்ஸ், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978.
3. **குறுந்தொகை,** பொ. வே. சோமசுந்தரனார் (உரை), கழகம், சென்னை, 1978.
4. **சங்கஇலக்கியம்** (பாட்டும் தொகையும்) எஸ். வையாபுரி பிள்ளை (பதிப்பு), தொகுதி 1, 2, பாரிநிலையம், சென்னை, 1967.
5. **சமூகவியலும் இலக்கியமும்,** சு. கைலாசபதி, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1979.
6. **தமிழர் சால்பு** (சங்ககாலம்), சு. வித்தியானந்தன், பாரி புத்தகப்பண்ணை, சென்னை, 1971.
7. **பத்துப்பாட்டு** மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், உ. வே சா. நூலகம், திருவான்மியூர், 1974.
8. **பரிபாடல்** மூலமும் பரிமேலழகர் உரையும், உ. வே. சா. நூலகம் திருவான்மியூர், 1980.
9. **பழந்தமிழ் நூற் சொல்லடைவு,** தொகுதி 1, பிரெஞ்சு இந்திய கலைக்கழகம், பாண்டிச்சேரி, 1967.
10. **பழந்தமிழ் நூற் சொல்லடைவு,** தொகுதி 2, பிரெஞ்சு இந்திய கலைக்கழகம், பாண்டிச்சேரி, 1968.
11. **பழந்தமிழ் நூற் சொல்லடைவு,** தொகுதி 3, பிரெஞ்சு இந்திய கலைக்கழகம், பாண்டிச்சேரி, 1970.
12. **புறநானூறு,** 1-200 ஔவை சு. துரைசாமிபிள்ளை (உரை) கழகம், சென்னை, 1972.
13. **புறநானூறு,** 201-400, ஔவை சு. துரைசாமிபிள்ளை (உரை), கழகம், சென்னை, 1973.
14. **புறநானூறு,** நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1981.
15. **புறநானூறு** மூலமும் உரையும், உ. வே. சா., நூலகம் திருவான்மியூர், 1963
16. **மண்ணும் மனித உறவுகளும்,** கோ. கேசவன், சென்னை, புக்ஹவுஸ், சென்னை, 1979.

## ஒரு வீரனின் நெகிழ்ச்சி

கவிஞர் கண்ணிமை
மூக்கனூர்ப்பட்டி, சந்தப்பட்டி, அ. நி. 635 305.
(தருமபுரி மாவட்டம்).

'அத்தான் !'

சித்திரம் செங்கனிவாய் பிளந்தது.

'கலையே ! சிலைபோல் நின்ற அவன் அவள் பக்கம் விழிக் கோணம் திருப்பினான். ஓரவிழிப் பார்வையால் ஒண்டொடியாள் வேண்டினாள். விரைவில் திரும்பி விடுங்கள் என்று !

'விழி இமைப்பதற்குள் வெற்றி மழை பொழிவேன். 'வென்றேன் நான்' என்ற செய்தி நீ கேட்பதற்கு முன் கோடி நிலவின் குளிர் வடிவே ! பகைக் குலத்தைக் கூறு போட்ட களைப்போடு உன் மடியில் வந்து சாய்வேன். சிலையே ! எங்கே சிரித்துக்காட்டு !' களம் நோக்கிக் கிளம்பிவிட்ட மாவீரன், அம் மான் விழியாளிடம் இப்படி மன்றாடினான் !

'சரியத்தான் ! திரும்பி வரும்போது என்ன வாங்கி வருகிறீர்கள் !'

'முல்லைச்சரம் கூடை, முத்து இரண்டுபடி.'

'உ ஹூம் ...'

'கொம்புத்தேன் ...... குடம் குடமாய் !'

'வேண்டாம் !'

'தோற்றோடும் மன்னனின் மணிமுடி !'

சீ ! சீ ! அவைகள் என் காலடி !'

'வேறென்ன வேண்டும் !'

மாணிக்கப் பாலாடை, மரகதத் தொட்டில், மறந்துவிட மாட்டீர்களே !'

களம் நோக்கிப் பாய்ந்தவனை, தொட்டில் ஒன்று கேட்டு, கட்டிலறை நினைவுச் சின்னம் தன் கனகமணி வயிற்றிலே வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பால் உணர்த்தி நின்றாள். நாணத்தால் அந்த அழகு மயிலின் கன்னக்கதுப்புக்களில் அந்தி வானத்தின் ரத்தச் சிவப்புச் சூழ்ந்து கொண்டது. தித்திக்கும் பழ உதட்டில் முத்துநகை புரண்டது ! சித்திரவிழிவேல் உருண்டது !

செய்திக் கேட்டதும் போர்க்கோலம் பூண்டு நின்ற ஆணழகன் உயிரெல்லாம் உடம்பெல்லாம் இன்ப மழையால் நனைந்து நின்றான்.

தன் வீரப் பெருங்குடியில் ஒரு இளநிலா உதிக்கப் போகிறது என்ற செய்தி அவன் தோள்களில் புது முறுக்கேற்றிவிட்டது.

வாள் முனையை ஒரு முறை தடவிக் கொண்டான். வீரச் சொல் உதிர்க்கும் அவன் உதடுகளுக்கு வனப்பு காட்டி நின்ற அரும்பு மீசையில் துடிப்பும், துரோகிகளைத் தூளாக்கிடும் படபடப்பும் கூத்தாடிற்று.

சேர்ந்தெடுத்த அழகின் சிலை வடிவுபோல் நின்ற அக்கோதையின் கன்னங்களில் இதழ் முத்தம் பதித்தான். பார்த்த விழி பிரிக்காமல், கோர்த்த கரம் எடுக்காமல் !

போர்ச் செய்தி சுமந்து அதிர்ந்தது அந்தப் பொல்லாத முரசு !

'இனியும் இங்கு நில்லாதீர் அத்தான் !' மூச்சு ஒலிக்கிறது. முத்துநகையாளோடி முயங்கிக்கிடக்கிறான். உணர்வில்லாச் சிறு புழு'- சென்று ஊர் தங்களை ஏச ஆரம்பிக்கும். ஓடுங்கள், ஒழியும் வரைப்பகையைச் சாடுங்கள் ; பாண்டிய வம்சத்துக்குக் கீர்த்தி தேடுங்கள்' என்றாள் அந்த தேனளந்த சிலை மேனியாள்.

தொடர்ந்து பல நாட்கள் போர் நடந்து கொண்டிருந்தது. வெற்றி எம் படைக்கு என்ற முடிவைக் கவனிக்கவும் முடியாத நிலையில் இரு தரத்து வீரர்களும் மதங்கொண்ட யானைகளைப் போல மோதிப்பொருதனர்.

பனிக்கடல் மூழ்கப் பரிதி எழும்போது கீழ்வானத்தில் காணப் படுமே செந்நிறம், அந்நிறம் பெற்று நின்றது. அப்போர்க்களம் ! வடுக்கள் பல பெற்றான் தொடுக்கும் கணைக்கு துணைக்கனை புயல்வேகத்தில் பொழிந்தான்! வேல்கண்டு இமைக்காத அவன் விழிகளில் வெந்தணல் வீசிற்று!

மாற்றான் படைகளை மலைமலையாக அனுப்பினான் சாவூருக்கு !

பிணக்குன்றில் நீந்தி வெற்றி முரசறைந்தான்; புண்பட்ட இடமெல்லாம் பவளத்துக்கண் போல ரத்த வியர்வை அரும்பி நின்றது; அதைத் துடைத்திடவும் நினைவு கொண்டானில்லை.

'சாட்டை கொண்டு தாக்கு; காற்றினும் கடிது செல்லட்டும்' புரவிகள்' — எனப்பாகனுக்கு ஆணையிட்டான்.

அவன் மனோ வேகத்தோடு புரவிகள் போட்டியிட்டன!

தேர்ச்சக்கரங்கள் புழுதிப்புகை கிளப்பியபடி புரண்டு கொண்டிருந்தன; அவன் நினைவுகளோ அதைவிட வேகமாக உருண்டு கொண்டிருந்தன.

'பாகனே! என் இல்வாழ் முல்லை பிரிவுத் துயர் தாங்காமல் என்ன ஆனாளோ? இந்நேரம் அவள் தாமரை முகத்தில் பசலை நிறம் படர்ந்து விட்டதோ என்னவோ? பாவி! நான் அறியேன்! நண்பனே! வரிக்குயில் பாடும்; மாமயில் ஆடும்; பேடையும் சேவலும் புது சுரம் காட்டும்; அன்னத்தின் அசைவிலே ஆனந்தத்தையும், மயிலின் ஆட்டத்திலே இன்பத்தையும்; பேடையின் நடையிலே பூரிப்பும் கண்டு கொண்டிருந்தவள்; தனிமைத் தணல் வாட்டும் இந்நிலையில் என்னை எண்ணி எண்ணி வருந்துவாள்; வான்மழைத் தாரையெனக் கண்ணீர் வடித்து நிற்பாள்!

அலைமோதும் இரவெல்லாம் அனல்பட்ட புழுவெனத் துடிப்பாள்; துயர மேலீட்டால் என்னைச் சபிப்பாள்; ஓட்டு பாகனே! தேரை விரைவாக ஓட்டு!

தோழனே! நான் வளர்த்துவரும் கிள்ளையோடு கிளிமொழி பேசுவாள்! 'கிளியே! என்று வருவார்? என் ஏந்தல்! இன்று வருவாரா? நின்று வருவாரா? என்றுதான் வருவார் என் இதய மன்னர்! சொல், செல்லக்கிளியே உன் செவ்வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்! என் ஆளனை நான் என்று பார்ப்பேன். இப்படி மெல்ல மெல்லப் பேசுவாள்.

ஆமாம்; வீட்டிலுள்ள மற்றவர்கள் கேட்க முடியாதபடி அவ்வளவு மெதுவாகத் தன் செல்லக்கிளியோடு மழலை பேசி உருகுவாள்!

ஏன் தெரியுமா?

தாயகத்துக்குக் கடமையாற்றப் பிரிந்து சென்ற தலைவனுக்காக வருந்தி நிற்பது தமிழ்ப்பெண்களுக்கழகல்ல; நாட்டுக்குத்தேவையெனில் வீட்டுக்கொரு வீரனை அனுப்பும் வைர நெஞ்சத் தாய்க்குலத்திற்கு அது ஏற்ற செயலுமாகாது; எனவேதான் வீட்டில் உள்ள மற்றவர்கள், களம் சென்றுள்ள காதலனை நினைத்து இவள் கலங்குவதையும் கொஞ்சும் பிள்ளையை முன்கையில் ஏந்தி! என்று வருவார்!' என்று ஏங்கிக் கிடப்பதையும் பார்த்து விட்டால் 'நாட்டுப் பற்றில்லாத நங்கையடி இவள்! வெறும் சோற்றுத்துருத்தி

ஏண்டி தமிழ் சாதிப் பெண்ணா நீ! சொத்தையல்லடி உன் கணவன் ; கொத்த வரும் பகை சாய்க்கத்தான் சென்றுள்ளான் ; கடமையாற்றப் போயிருக்கிறான். 'கோழைச் சாதிப் பெண்போலக் குமுறி நிற்கிறாயே !' — என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தோடுதான், அச்சடித்த என் தமிழ்ப் பதுமை செவியோடு செவி வைத்துத் தன் செல்லக் கிளியோடு முறையிட்டு நிற்பாள் ! தாவிச் செல் ! இனியும் அவளைத் தவிக்கவிட முடியாது! என் நிலையறிந்த பாகனே ! வல்லமைமிக்க தமிழ் மகனே ! ஓட்டு! தேரை விரைவாக ஓட்டு !' — என்று பாகனுக்கு வேண்டுகோள் விடுத்தான்.

மாணிக்கத் தொட்டிலும் மரகதப் பாலாடையும் எங்கே என்று அவள் கேட்டால் என்ன செய்வது என்று அவன் நினைத்து முடிப்பதற்குள், தேர் அவன் இல்லத்துத் தலை வாயிலில் வந்து நின்றது. கோடி நிலவின் குளிர் வடிக்கும் அம்முகத்தழகி வாய் நிறைய வரவு கூறி நின்றனள் ; வைத்த விழி எடுக்காமல் அவன் வண்ணச் சிலை மேனியை-வைரத்தோள்களை ; ரத்த வடுக்களை ; விழியால் ! மேய்ந்தாள் இதழோடு இதழ் இணைத்து ஓய்ந்தாள் ! அந்த அகத்துறைக்காதல் ஓவியத்தின் சொற்சித்திரம் இதோ :

"செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ
சென்றி சினோர் திறத்து என
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை மாண்நலம் பெறவே !

— அகநானூறு.

## ஐய வினாக்கள்

ச. பாலசுந்தரம்

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை (பெயர் - 34)

1. வேறுபடுவது பெயர்ப் பொருள், வேறுபடுத்துவது வினை வேறுபாட்டினைக் காட்டுவது உருபிடைச் சொல் ஆகலான் மூவகைச் சொற்களுக்கும் உரியது வேற்றுமை இலக்கணம் என்பதை ஓர்ந்து தொன்னூலார் வேற்றுமையைத் தனியோரியலாகக் கூறியிருக்க இவர் அதனைப் பெயரியலுள் பெயரின் பாகுபாடு போலக் கூறியது தகவாகுமா ?

வேற்றுமையுருபுகள் இவை எனக் கூறுமிடத்துப், "பெயரே ஐ ஆல் கு இன் அது கண் விளியென்றாகும் அவற்றின் பெயர் முறை" என்கிறார். ஆண்டுப் பெயர் என்பது எழுவாய் வேற்றுமை உருபெனின் ஈண்டு ஏற்கும் பெயர் என்பது யாது? பின்னர் "எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே" என்பவர் உருபுகள் ஈறாய் நின்று பொருள் வேற்றுமை செய்யும் என்பது மயங்க வைத்தலாகாதா ? முடிக்கும் சொல்லாகிய பயனிலையின்றி ஐ ஆல் முதலிய உருபுகளே பொருளை வேற்றுமைப்படுத்துமா? படுத்தாதெனின் வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை என்பது பொருந்துமா ? பின்னர் இவரே "செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம் செய்பொருள் ஆறும் தருவது வினையே" (வினை-1) எனக் கூறுவது மாறுகொளக் கூறலாகாதா ?

2. "எழுவாயுரு திரிபில் பெயரே, வினைபெயர் வினாக்கொளனள் அதன் பயனிலையே" அதன் என்னும் சுட்டு எதனைக் குறிக்கின்றது ? பயனிலை கொள்ளும் என்றது எதனை ?

3. "இரண்டாவதனுருபு ஐயே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதியாகும்."

மேலேஉருபுகளை வரிசைப்படுத்தியதன்றி வேற்றுமைப்பொருள்கள் இவை என வரிசைப்படுத்தாதவர் ஈண்டு இரண்டாவதன் உருபு என உரிமைப்படுத்திக் கூறுவது நூல் நெறியாகுமா ? ஆக்கல் அழித்தல் முதலியவை ஐகார உருபின் பொருள்களா ? இரண்டாம் வேற்றுமைக்குரியப் பொருள்களா ? இவ்வினா ஏனைய வேற்றுமைக்குரிய சூத்திரங்கட்கும் பொருந்தும். ஐந்தாம்

வேற்றுமைக்குரியவாகப் பின்னர் நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே என்பார் ஈண்டுக் கூறும் ஒத்தல் என்பதும் ஆண்டுக் கூறும் ஒப்பு என்பதும் ஒன்றா? வேறு வேறா? உடைமை ஆறாவதன் பொருளா இரண்டாவதன் பொருளா?

4. மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஒடு
 கருவிகருத்தா உடனிகழ்வதன் பொருள்

"பெயரே ஐ ஆல்" என்னும் சூத்திரத்துள் மூன்றாவதற்கு ஒரு உருபே கூறியவர் ஈண்டு நான்குருபுகள் கூறுவது இலக்கண நெறியாகுமா? ஆல், ஆன் என்பவையும் ஒடு ஒடு என்பவையும் பொருளால் வேறுபட்டனவா? வடிவத்தான் வேறுபட்டன ஆதலின் எடுத்துக் கூறினார் எனின், "சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே" இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் "உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பன கொளலே (கன்-உருபு-15) என ஏதுப் பொருளில் வரும் மாறு, உளி, இன் என்பவற்றையும் கூட்டிக் கூறாததேன்?

கருத்தா என்றது வினைமுதலா, கருவியா? கருவி எனின் விதந்து கூறியதேன்? விளங்குதற்கு எனின் கருவி வேறுபாடு களை எல்லாம் கூறாதது குன்றக் கூறலாகாதா? "உடன் நிகழ்வதன் பொருள்" உடனிகழ்ச்சி என்பது வேற்றுமை நிலையா? உணவை உண்டான் என்புழி ஐயுருபு உணவினைச் செயப்படு பொருளாக வேறுபடுத்தியமை போலக் கொற்றனொடு சாத்தன் வந்தான் என்னுமிடத்து ஒடு உருபு கொற்றனை எப்பொருளாக வேறுபடுத்தியது. உடன் வருவோனாக வேறுபடுத்தியதெனின் எச்சவும்மை எதிர்மறைஉம்மை பிரிநிலை ஏகாரம் முதலியவை எல்லாம் பொருள் வேறுபாடு காட்டுதலின் அவை எல்லாம் வேற்றுமையாகுமா. வினை ஒன்றனை வேறுபடுத்துவதன்றி வினையே வேற்றுமையாகுமா? அவனொடு பொரேன் — கோலொடு நின்றான் இரவு, ஊரொடு பகைக்கின்வேரொடும் கெடும் என வருவனவெல்லாம் மூன்றாம் வேற்றுமைத் தொடர்களா? உடன் நிகழ்ச்சியை வேற்றுமையாகக் கூறிய முதல் நூல் யாது?

தொல்காப்பியம் கூறும் 'அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி அதனொடியைந்த வேறு வினைக் கிளவி' என்பவை முதலாயவெல்லாம் கருவிப் பொருளில் நிற்பதைக் காணாமல் இங்ஙனம் கூறியது 'தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்' என்னும் வழுவாகாதா? உடனிகழ்ச்சி - கருவி என்னும் இருவேறு பொருள்களை ஒருவேற்றுமையாகக் கூறுவது பொருந்துமா?

5. "நான்காவதற் ...... பொருட்டு முறையாதியின் இதற்கிது எனல் பொருளே" வேற்றுமை மயக்கமாகக் குவ் வுருபை ஏற்று வருதலன்றி முறைப் பொருள் நான்காம் வேற்றுமைக்குரிய கோடற் பொருளாகுமா? உறையூர்க்கு மேற்குக் கருவூர் எனவரும் எல்லைப் பொருள் இவ்வுருபு காரணமாக நான்காம் வேற்றுமையாகுமா?

6. "ஐந்தாவனுருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருளே"

இல் என்பதனைப் பின்னர் ஏழாம் வேற்றுமை உருபாகவும் கூறுதல் பொருந்துமா? ஒரு உருபே இரண்டு வேற்றுமைகளைச் செய்தல் கவர் பொருள் தருதலாகாதா? வீட்டிலிருந்து சென்றான் மரத்தினின்று வீழ்ந்த கனி என இருந்து நின்று முதலாயினவும் நீக்கற் பொருள் தருதலின் அவற்றையும் உருபுகளாகக் கூட்டிக் கூறாமை குறையாகாதா? ஈண்டுக் கூறிய ஏதுப்பொருள் என்பதும் மூன்றாம் வேற்றுமைக் கோதிய கருவிப் பொருள் என்பதும் வேறு வேறானவையா? அன்றெனின் ஒரு பொருளையே இரண்டு வேற்றுமையாகக் கூறியது பொருந்துமா? இங்ஙனம் கூறும் முதல் நூல்யாது? காக்கையிற் கரிது களம்பழம்-அமிழ்தின் இனியது சிறார் தம் மழலை என வரும் உறழ்ச்சிப் பொருள் யாதனுள் அடங்கும். இதனுள் அடங்குமெனின் அதனை எடுத்துச் கூறாதது குன்றக் கூறலாகாதா

7. "ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம்" ஏனை வேற்றுமைகட்கு

ஒருமையுருபு-பன்மையுருபு கூறாமல் ஆறாம் வேற்றுமைக்கு மட்டும் கூறிய காரணம் யாது? உருபே ஒரு பன்மை காட்டும் எனின் அஃது எவ்வாறு இடைச் சொல்லாகும்? ஒருமைக்கு அதுவும் ஆதும், பன்மைக்கு அவ்வும் கூட்டிக் கூறுக எனின், கூறாமையான் எய்தும் வழுயாது? வேந்தன் மக்கள் மரக்கிளைகள் என்பவை உருபு விரியின் எவ்வாறு விரியும்? அது-ஆது என்பவை வேறு வேறு உருபுகளா?

8. "கண்கால் கடையிடை ...... புறமில் இடப்பொருளுருபே" கண்கால் கடையிடை முதலியவை இடவேறுபாடுகளைக் குறிக்கும் சொற்களா? இடம் என்னும் ஒருபொருளையே தரும் மாற்றுச் (பரியாயச்) சொற்களா? இடவேறுபாடு காட்டுபவை எனின் உருபென்றல் பொருந்துமா?

9. "எட்டனுருபே எய்து பெயரீற்றின் திரிபு, குன்றல், மிகுதி, இயல்பு, அயல்திரிபு" என்றவர், பின்னர் ஒன்பது சூத்திரங்களான் வரித்தல் மிகைபடக் கூறலாகாதா ?

10. "நுவ்வொடு வினாச்சுட்டுற்ற னளர" என்று வரையறுத்தமையான் தமன், தமள், தமர், எமன், எமார், எமள், எமர் என்னும் படர்க்கைப் பெயர் தன்மைப் பெயர்கள் விளிகொள்ளும் என்பது கருத்தா ?

11. பல்வேறு வகையாகவரும் வேற்றுமைப்பொருள் மயக்கத்தையும், தெளியக் கூறாமல் உருபுமயக்கத்தையும் மொன்றையே அதுவும் ஆசிரிய வசனத்தை மட்டுமே கூறி முடித்தது சென்று தேய்ந்திறுதல் என்னும் குற்றமாகாதா?

(தொடரும்)

## பாம்புகள் பற்றிய சில உண்மைகள்

பாம்புகளில் பலவகைகளுக்கு நஞ்சு இல்லை. பாம்புகள் இரப்பர் போன்ற மேலுறைகளுடன் கூடிய முட்டைகள் இடுகின்றன. சிலவகைப்பாம்புகள் குட்டிபோடும்.

மனிதர்கள் பாம்புகளைக்கண்டு தேவையின்றி அஞ்சுகின்றனர். அவர்கள் எல்லாப்பாம்புகளும் நச்சுப்பாம்புகள், ஆபத்தானவை எனக் கருதுகின்றனர். பலர் பாம்புகளைக் கண்டதும் கொல்லத் துணிகின்றனர். ஆனால் அது தவறு. ஏனெனில், அவை நமக்குத் தொல்லைதரும் எலிகள் போன்ற பிராணிகளைக் கொன்று தின்கின்றன.

பாம்புகள் சில செண்டிமீட்டர் நீள முதல் 30 அடி நீளம்வரை பல வடிவங்களில் உள்ளன. அவற்றின் முதுகெலும்பில் 300 பாகங்கள் வரை உள்ளன. பாம்புகளின் உடல் மென்மையான உலர்ந்த செதில்களால் மூடப்பெற்றது. அவை தன்மேல்தோலைச் சாதாரணமாக ஓர் ஆண்டில் பலமுறை உரிக்கின்றன. குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறையாவது தோலை உரிக்கின்றன. அவற்றின் கண்கள் ஒளி ஊடுருவக்கூடிய ஒரு மூடியால் எப்பொழுதும் திறந்தேயிருக்கும்.

## இரை தின்னும் இயல்பு

பாம்புகளுக்கு உள்நோக்கி வளைந்த பல பற்கள் இருப்பினும் அவை உணவை மெல்லுவதற்குப் பயன்படுவதில்லை. ஆனால் உணவை வாயிலிருந்து தொண்டைக்கும் வயிற்றுக்கும் தள்ளுவதற்கும் பயன்படுகின்றன. சில பாம்புகளின் பற்கள் நஞ்சை எதிரிகளின் உடலில் செலுத்துவதற்கு ஏற்றபடி உள்ளுளையுடையதாக இருக்கும். பெரும்பான்மையான பாம்புகள் பூச்சிகளையும் எலி முதலிய பிராணிகளையுமே தின்கின்றன. வெப்பமான பகுதிகளில் வாழும் சிலவகைப் பாம்புகள் பன்றிகளையும் தின்கின்றன. பாம்புகள் இரையைப் பிடிப்பதில் மிகவும் திறமையானவை. ஆனால் அவைகளால் பலரும் நினைப்பதுபோல வேகமாக ஊர்ந்து செல்லமுடியாது.

பாம்புகள் இரையைப் பிடிக்கும்பொழுது சுருண்டு படுத்துக் கொண்டு தலையை வேகமாகப் பாய்ச்சுகின்றன. அவை உணவை மெல்லாமல் முழுமையாக அப்படியே விழுங்கிவிடுகின்றன. அவற்றின் செரிமான நீர் விலங்குகளின் மயிர்கள், இறகுகள் போன்றவற்றைத் தவிர ஏனைய பாகங்கள் எவ்வளவு கடுமையானதாக இருப்பினும் அவற்றைச் செரிக்கும் சக்தி

உடையது. பாம்பு தன் உடல் அளவைவிடப் பெரிய அளவுள்ள விலங்குகளைக் கூட எளிதாக விழுங்குகின்றன. அதற்குத் தக்கப்படி அதன்வாய் அகலமாகத் திறக்கும் வகையிலும், தாடை இணைப்புகளில் வெளிப்புறமாக மடிக்கக்கூடிய வகையிலும், தேவைப்படின் சிறிதுநேரம் தனியாகப் பிரிந்திருக்கும் வகையிலும் அமைந்துள்ளது. சில பாம்புகள் தன் உடலால் உணவை வளைத்து நசுக்கித் தின்கின்றன. பாம்புகள் தன் மூடப்பட்ட செவிகளால் நிலத்தின் அதிர்வைக் கேட்கின்றன.

## வாழ்விடம்

பாம்பு குளிர் இரத்த வகை சார்ந்த விலங்காகும். அவற்றின் உடல் வெப்பம் தான் வாழும் சூழ்நிலைக்கேற்றபடி மாறுபட்டுக் காணப்படுகிறது. சாதாரணமாக அவை உறைநிலைக்குக் கீழ்பட்ட குளிரிலும், (100°F 37.8°C)க்கு மேல்பட்ட வெப்பத்திலும் இறந்துவிடுகின்றன. எனவே ஆர்க்டிக் பகுதிகளில் மிகக் குறைவாகவும் வெப்பமண்டலப் பகுதிகளில் அதிகமாகவும் காணப் படுகின்றன. குளிர் காலத்தை அவை பூமிக்கடியில் உறக்க நிலையிலேயே கழிக்கின்றன.

## பாம்புக்கடியும் - தவறான சிகிச்சையும்

இந்தியாவில் பாம்புக்கடியினால் மக்கள் இறப்பதைவிட, அதற்குப் பார்க்கும் மருத்துவத்தால் அவர்கள் இறப்பதே மிகுதி யாக நிகழ்கிறது. பாம்பு கடித்த இடத்தைக் கத்தியால் அறுத்து நஞ்சை உறிஞ்சும் முறை பழங்காலந்தொட்டு மருத்துவர்களாலும், சாரண இயக்கங்களாலும் பிற முதலுதவி முறைகளினாலும் பரிந் துரைக்கப்படுகிறது. இம்முறையில், உண்மையில், போதுமான நஞ்சு உறிஞ்சப்படுவதில்லை. பெரும்பான்மையோர் பாம்பின் நஞ்சைவிட இந்த மருத்துவ முறையினாலேயே இறக்கின்றனர்.

நல்லபாம்பு போன்ற சிலவகைப் பாம்புகளின் நஞ்சு நரம்பு மண்டலத்தைப் பாதிக்கிறது. விரியன் போன்ற சிலவகைப் பாம்புகளின் நஞ்சு இரத்த நாளங்களில் சுவர்களைச் சிதைப்ப துடன் இரத்தத்தில் உறைவுத்தன்மையைக் கெடுத்த நீர்த்து விடுகிறது.

எல்லாப் பாம்புகளும் நச்சுப் பாம்புகளல்ல. நச்சுப் பாம்புகள் கூடத் தாங்கள் துன்புறுத்தப்படும்போதும் பெரும்பாலும் கடிப்பதில்லை. கடித்தாலும் நம் உடலில் எல்லாச் சமயங்களிலும் நஞ்சைச் செலுத்துவதில்லை. எனவே நச்சுப்பாம்பு கடித்தது

என்பதற்கும் பாம்புக்கடியால் நஞ்சு உடலில் ஏறியது என்பதற்கும் வேறுபாடு உண்டு. பாம்பு கடிக்கும் பொழுதெல்லாம் அனிச்சைச் செயலாக அதன் நஞ்சு வெளியேறுவதில்லை. நஞ்சைச் செலுத்துவது என்பது நாம் துப்புவது, சிறுநீர்க்கழிப்பது போன்று தன் விருப்பத்திற்கு உட்பட்ட ஒன்றே. பாம்பு தன் எதிரியிட மிருந்து தப்புவதற்காக் கடிக்கிறதேயன்றி எதிரியைக் கொல்வதற்காக அன்று. அவ்வாறு கடிக்கும் பொழுது அது தன் நஞ்சின் பெரும் பகுதியையோ முழுவதையுமோ வெளியேற்றாமல் இருத்திக் கொள்கிறது எனவே, பல நச்சுப்பாம்புகள் கடித்தால் கூட அது முழுக்க அபாயமானதாகவோ, குறைந்த பட்சம் மரணத்திற்கும் காரணமானதாகவோ இருப்பதில்லை. மாறாகத் தூய்மையற்ற கத்தியால் கடிவாயை அறுப்பதன் மூலம் காயம் புரையோடிப்போய் புண் ஆறாத நிலையை அடைதல், நரம்புகளும் இரத்த நாளங்களும் துண்டிக்கப்படுவதால் சில சமயங்களில் வெளிப்புறமாகத் தங்கியுள்ள நஞ்சு எளிதாக இரத்தத்துடன் கலத்தல், அளவுகடந்த அச்சம் ஆகிய இவையே கடிபட்டவரை பெரிதும் பாதிக்கின்றன.

கடிவாய்க்குமேல் இறுக்கிக்கட்டுவது என்பதும் முற்றும் சரியான முறையன்று. இதனால் இரத்த ஓட்டம் தடைபட்டு அப்பகுதி முழுக்கச் செயலிழந்து போகக்கூடும். எனவே 15 நிமிடங்களுக்கு ஒரு முறையாவது கட்டைத் தளர்த்திவிட வேண்டுவது அவசியம். மேலும் கத்தியால் கீறுவதைப்போன்று இதுவும் மிகுந்த வலியை ஏற்படுத்துவதே.

நச்சுப்பாம்புக்கடி என்பது எப்பொழுதும் அவசரச் சிகிச்சைக்கு உரியதாகக் கருதப்பட வேண்டியதில்லை. பாம்பு கடித்து ஓரிரு நாட்களுக்குப்பின் வெகுதூரத்திலுள்ள ஊரிலிருந்து மாட்டுவண்டி யில் கொண்டு வந்தால் வேண்டுமானால் அது அவசரச்சிகிச்சைக்கு உரியதாகக் கருதப்படலாம். ஆனாலும், உயிரின் இயக்கம் சிறிதளவே இருந்தாலும் திறமையான மருத்துவர் எளிதாக அவரைப் பிழைக்க வைத்துவிடலாம்.

பாம்பு கடித்தவுடன் பத்தடிதூரம் ஓடுவதற்குள் ஒருவர் நஞ்சு பாய்ந்து விழுந்து இறந்தார் என்பதெல்லாம் சரியானதாக இருக்க முடியாது. கடித்தாலும் உடனடியாகக் கொல்லக்கூடிய அளவு நஞ்சுள்ள பாம்பு உலகத்திலே கிடையாது. இந்தியாவில் உள்ள சில கொடிய நச்சுப்பாம்புகள் கடித்தால்கூட அரைமணி நேரம் முதல் 3 மணிநேரம் வரை மரணத்திற்கான அறிகுறியே தெரிவ தில்லை. எனவே, அதிகக் கலவரமுற்று ஓடுவதும் உடலைத்

துண்டாடுவதும் தேவையில்லை. நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கியமான குறிப்பு பாம்பின் நஞ்சு இரத்த நாளங்கள் வழியாக உடலில் அதிகம் பரவுவதில்லை என்பதுதான். அது நிணநீர்ச் சுரப்பிகள் வழியாகவே பரவுகின்றது.

## கடித்த பாம்பை இனங்காணுதல்

பாதிக்கப்பட்டவரின் உடலில் உள்ள அறிகுறிகளைக் கொண்டே கடித்த பாம்பை இனங்காண முடியும். அவர் உடலிலிருந்து எடுக்கப்பட்ட ஓரிரு துளி இரத்தம் ஒரு கண்ணாடிச் சில்லின்மேல் காற்றுப்பட வைக்கப்பட்டுச் சிறிது நேரத்திற்குப் பின்னும் அது உறையாமல் ஓடினால் வீரியன் வகையைச் சேர்ந்த பாம்பு கடித்தது எனலாம்.

நல்லபாம்பு கடித்தால் நஞ்சு நரம்புகளைத் தாக்கித் தசைகளைச் செயலிழக்கச் செய்கின்றது. இமைகள் கட்டுப்பாட்டினை இழந்து தொங்கத் தொடங்குகின்றன. இதனால் தெளிவாகப் பார்க்க முடியாமல் கண் மறைக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர் கண்ணை நன்றாகத் திறந்து பார்க்க முயன்ற வண்ணமிருந்தால் அவரை நல்லப்பாம்பு கடித்ததாகக் கொள்ளலாம்.

கிரைட் (Krait) என்னும் வகைப்பாம்பு கடித்தால் அது பிற பாம்புகளைவிட மரணத்தைச் சற்று விரைவில் கொண்டுவரும். எனவே அதற்கு மாற்று மருந்து உடனடியாகக் கொடுக்கமுனைவது உண்டு இவ்வகைப்பாம்பினால் கடிக்கப்பட்டவர் பக்கவாதத்தால் தாக்கப்படுவதுடன் அடிவயிற்றில் கடுமையான வலிக்கும் ஆளாகிறார்.

## மாற்று மருந்தும் பயன்பாடும்

நஞ்சுக்கு மாற்றுமருந்து குதிரையின் குருதி நிணநீரிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சில சமயங்களில் ஏற்புத்திறன் குறைவால் பாம்பின் நஞ்சைவிட இந்த மாற்று மருந்தால் நோயாளி சில நிமிடங்களில் இறக்க நேரிடலாம். எனவே நஞ்சினால் ஒருவர் இறக்க நேரிடும் என்னும் ஆபத்தான நிலையிலேயே இம் மாற்று மருந்தினைப் பயன்படுத்தலாம்.

பாம்புக்கடி நஞ்சால் சாவதைவிட தவறான மருத்துவத்தாலும் அச்சத்தாலுமே பெரும்பாலானவர்கள் இறக்கின்றனர்.

("நன்றி. அறிவியல் பண்ணை, தமிழ்ப்பல்கலைக் கழகம்')'

# சிந்தாமணி காட்டும் சமுதாயத் தரப் பிரிவுகள்

த. ஈசுவரபிள்ளை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சீவகசிந்தாமணி காட்டும் சமுதாயத்தில் நால்வகைப்பாகுபாடுகள், தொழில்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நிலவிய சமூதாயத் தரப்பிரிவுகளைக் காண்பதே இதன் நோக்கமாக அமைகின்றது.

## 1. நால்வகைப் பாகுபாடுகளின் அடிப்படையில் நிலவிய தரப்பிரிவுகள்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலியவற்றில் சுட்டப் பெறும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைப் பாகுபாடுகள் சிந்தாமணி காட்டும் சமுதாயத்திலும் இடம் பெற்றிருந்தமையை அரிய முடிகின்றது. பதுமையைத் தீண்டிய பாம்பின் இலக்கணத்தைக் கூறும் சீவகன் அந்தண, அரச, வணிக, சூத்திர வருண வகைப் பாம்புகளைக் குறிப்பிடுகின்றான். (பதுமை : 122) இவண் சூத்திர வருணம் பற்றிய குறிப்பு உள்ளது. ஆனால் இதைத் தவிரச் சூத்திர வருணம் பற்றிய செய்திகள், சிந்தாமணியில் வேறு எங்கும் காணப்பெறவில்லை.

### 1.1 அந்தணரின் உயர் சமுக மதிப்பு :

சிந்தாமணியில் அந்தணர்கள் மறைகளைக் கற்றுணர்ந்தோர் களாகவும், குடை, தண்டு முதலிய பொருள்களைக் கொண்டவர் களாகவும் காட்டப்பெறுமாற்றான் (கனக 3:4 கனக : 316:1 சுர : 15) இவர்கள் வைதீக அந்தணர்கள் என்றே கருதலாம்.

### 1.1.1. பாதுகாக்கத் தக்கவர்களாகக் கருதப் பெறல் :

நந்தகோபன் ஆனிரையை மீட்டுத் தருவோருக்குத் தன் மகள் கோவிந்தையை மணம் முடித்துத் தருவதாக அறிவித்ததைக் கேட்ட சீவகன்" நான் பசு, துறவிகள், மகளிர், குழந்தைகள், பார்ப்பார் இவர்களைக் காக்கவில்லை எனின் தம்பால் தங்கிய வீரமகள் அயலானிடத்து மாறியதைக் கண்டவிடத்தும் இனிய பாற்சோற்றை விழையும் இழிந்த ஒழுக்கமுடைய கட்டியங்காரனை

ஒப்பேன்'' எனக் கூறுகின்றான். (கோவிந்தை : 35) இதனால் பார்ப்பார் பாதுகாக்கப்பட வேண்டியவர் என்றும் அவர்களைப் பாதுகாத்தால் கடமை என்றும் சமுதாயத்தால் கருதப் பெற்றமை விளங்குகின்றது.

### 1. 1. 2. துன்பம் செய்தல் பாவம் எனக் கருதப்பெறல் :

சுரமஞ்சரியைக் காணும் பொருட்டுக் கிழப் பார்ப்பன வடிவம் கொண்டு வந்த சீவகனைக் கண்ட காவற் பெண்கள்'' இவரை வருந்த மொழியாதீர்; அவ்வாறு செய்தல் பாவம்'' என்கின்றமையால் (சுர : 22 : 1) அந்தணர்களை வருத்தல் பாவச் செயல் என்ற எண்ணம் நிலவியமை தெரிகின்றது.

### 1. 1. 3. இல்லற நெறியில் அங்கம் வகித்தல் :

சீவகனுக்கும் காந்தருவதத்தை, கனகமாலை ஆகியோருக்கும் வேதமுறைப்படி வேள்வித் தீ வளர்த்து, நெய் சொரிந்து, நீர் வார்த்துக் கொடுக்கவும் அந்தணர்கள் முன்னின்று நடத்தவும் திருமணங்கள் நடைபெற்றனவாகக் காட்டப்பெறுகின்றன. (காந்த : 342, 343, கனக : 131) இதனால், அந்தணர்கள் மக்களின் இல்லறநெறியிலும் தலைமைப்பங்கு வகித்துள்ளமை புலனாகின்றது.

### 1. 1. 4. தானங்கள் பெறுதல் :

மன்னனாகப் பதவியேற்ற சீவகன் அந்தணர்க்கு இறையிலி நிலங்களைத் தானமாகக் கொடுக்கின்றான் (பூமகள் : 47). இது அந்தணர்கள் மன்னனிடமும் செல்வாக்குப் பெற்றிருந்தமையும் பொருளாதார நிலையில் மேம்பட்டிருந்தமையும் காட்டுகின்றது.

இவ்வாறு வைதீக அந்தணர்கள் சமுதாயத்தில் உயர் சமூக மதிப்புடன் (higher social status) வாழ்ந்துள்ளமையைச் சிந்தாமணி காட்டுகின்றது.

### 1. 2. குலம் பாராட்டல் :

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைப் பாகுபாடுகளிடையே குலம் பாராட்டும் எண்ணம் நிலவியிருந்தது என எண்ண இடமுள்ளது. அருகக் கடவுளை வணங்கச் சென்ற சீவகனைக் கண்டவர்கள் "இவன் குருகுலத்தோன் ; காசிபக் கோத்திரத்தோன்'' என்கின்றனர். (முத்தி : 417) இதனால் இறைவனை வணங்குமிடத்தில் கூடக் குலம், கோத்திரம் பாராட்டும் போக்கு நிலவியிருந்திருக்கலாம் எனக் கருதத் தோன்றுகின்றது.

### 1.3. குலவழித் திருமணம் :

ஆயர் குலத்தைச் சார்ந்த நந்தகோபன் தன் மகள் கோவிந்தையை மணந்து கொள்ளுமாறு சீவகனிடம் வேண்ட, அதற்குப் பதிலுரை கூறாது சீவகன் நிற்கின்றான். அவன் உளக் குறிப்பை அறிந்த நந்தகோபன் "குலம் நினையல் நம்பீ ! என்கின்றான். இதற்குச் சீவகன் "தம் குலத்திற் சிறந்த கன்னியரின் குணங்களை ஆராய்ந்து தழுவின் அல்லது தம் குலத்திற் கொவ்வாத மகளிரைக் கூடுதல் ஓவ்வார். மக்கள் ஒழுங்கு இத்தகையது." என எண்ணுகின்றான் (கோவிந்தை : 74, 75). மேலும், சீவகனுக்குக் காந்தருவதத்தையை மணம் செய்வித்தமையை அறிந்த கட்டியங்காரன் குலத்திற்கு வடு உண்டாக்கி விட்டதாகக் குறை கூறுகின்றான் (காந்த : 250). இவற்றால் சிந்தாமணி காட்டும் சமுதாயத்தில் ஒரே குலத்தினிடையே நிகழும் திருமணமே சிறப்புடைத்து என்றும் இதற்கு மாறாக நிகழும் திருமணம் குற்றமுடையது என்றும் கருதப் பெற்ற நிலை வெளிப்படுகின்றது. இவ்வேறு பாடுகள் நால்வகைப் பாகுபாடுகளின் அடிப்படையில் காணப்பெற்றனவே தவிரச் சாதியடிப்படையில் காணப்பெற்றமைக்குரிய சான்றுகள் இல்லை. எனினும், குலவழித் திருமணம் சாதீய அமைப்பின் தன்மைகளில் ஒன்று (Kettar, History of Caste in India P. 27) என்பதும் இவண் குறிப்பிடுதற்குரியது ஆகும்.

### 1.4 நெகிழுந் தன்மை : (Flexibility)

கலுழவேகன் என்ற வித்தியாதர மன்னன் சீதத்தன் என்ற வணிகனிடம் "யான் அரசன், நீ வணிகன் என்ற வேறுபாடு இல்லை" என்பதாலும் (காந்த : 52), "காந்தருவதத்தையை அரசன் முதலிய மூவகைக் குலத்துள்ளார் யாவராயினும் இவளை யாழ்ப்போட்டியில் வெல்வோருக்கு மணம் முடித்துக் கொடுக்கப் படும்" என முரசறைவதாலும் (காந்த : 116) குலம் பாராட்டும் எண்ணம் அவ்வளவு வலுப்பெறவில்லை என்பதும் நட்பு, பெருமை முதலியவற்றில் அது நெகிழும் தன்மையுடன் காணப்பட்டது என்பதும் புலப்படுகின்றது.

## 2. தொழில் அடிப்படையில் தரப்பிரிவுகள் :

மக்கள் மேற்கொண்ட தொழில்களின் (Occupation) அடிப் படையில் குறிப்பிட்ட சில தொழில்களை மேற்கொண்டவர்களை இழிசினன், இழிபிறப்பினோன் புலையன் என இழிவுபடுத்தப் பெற்ற நிலையைச் சங்க இலக்கியத்திலேயே காண

முடிகின்றது. இத்தகைய நிலை சிந்தாமணியின் சமுதாயத்திலும் இடம்பெற்றமை தெரிகின்றது.

## 2.1 வேட்டுவர், பரதவர் :

சுதஞ்சனன் உலகிலிருந்து இவ்வுலகிற்கு வந்த சீவகன், எதிரில் கண்ட வேட்டுவனைப் பார்த்து "முற்பிறப்பில் ஊன், தேன், கள், முதலியவற்றை உண்டு, உயிர்களைக் கொன்ற தீவினையால் இப்பிறப்பில் இழிந்த வேடராய்ப் பிறக்க நேர்ந்தது" (பதுமை: 98) என அறிவுரை கூறுகிறான். சீவகனுக்கு அறிவுரை கூறும் முனிவர் "வில்லால் விலங்குகளைக் கொன்று அவற்றின் ஊனை உண்போரும், மீன்படு கடலின் ஓரத்தில் வாழும் பரதவரும் இழி தொழிலைப் புரியும் இழி குலத்தினின்றும் தப்பி உயர்ந்த பழங்குடியிற் பிறத்தல் அரிது" எனக் குறிப்பிடுகின்றார் (முத்தி: 153).

இவற்றால் முற்பிறப்பில் தீவினை செய்தோர் இப்பிறப்பில் இழிதொழில் புரிவர் என்ற சமுதாய நம்பிக்கை (Social faith) வெளிப்படுவதுடன் பிற உயிர்களைக் கொல்லும் தொழில்களை மேற்கொண்ட வேட்டுவர்களும் பரதவர்களும் கொல்லாமை என்னும் அறநெறியின் அடிப்படையில் இழி பிறவியினராகக் கருதப் பெற்றமையும் விளங்குகின்றது. சாதியின் தோற்றக் காரணங்களுள் ஒன்றாகச் சமூகவியலாளர் கொல்லாமை என்னும் அறநெறியின் செல்வாக்கையும் குறிப்பிடுவர் என்பது இவண் சுட்டுதற்குரியது ஆகும்.

## 2. 2. புலையர் :

சீவகன் துறவை மேற்கொண்டமையைக் கண்டு வருந்தியவர்களிடம் அவன்" சுடுகாட்டிலே உப்பில்லாத சோற்றைப் புலைமகன் நீருடன் சொரிய யானும் அவற்றை ஏற்றுக் கையாலிட்ட அப்பலியை உண்டு பாடையின் மேற் கவிழ, நீவிரும் மைவிளங்கும் கண்களில் கண்ணீர் சொரிய வீட்டை மெழுகி வாழும் இப் பயனில்லாத பொருளை விரும்புகின்றீர்" என அறிவுரையும் ஆறுதலும் அளிக்கின்றான். (முத்தி : 386) இதனால், சுடுகாட்டில் பிணத்திற்கு உப்பில்லாத சோற்றைப் படைக்கும் தொழில் செய்வோன் இழிதொழில், தூய்மையற்ற தொழில் என்னும் அடிப்படையில் புலையன் என இகழப் பட்டமை தெரிய வருகின்றது.

## 3. பொருளாதார ஏற்றதாழ்வு அடிப்படையில் தரப்பிரிவுகள் :

பொருளாதாரக் காரணிகள் எல்லாக் காலங்களிலும் மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளன (Yogyendra Bahadur Singh, Social life in Ancient India P. 206) பண்டைத் தமிழகம் சமன்ற நிலப்பரப்புகளைக் கொண்டிருந் தமையையும் இதனால் நிலவிய சமனற்ற வளர்ச்சி நிலைகளையும் (uneven development). இதன் காரணமான பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், அதனால் மக்களிடையே தரப்பிரிவுகள் காணப் பட்டமையையும் சங்கத் இலக்கியம் மூலம் அறிய முடிகின்றது. இத்தகைய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் நிலவிய தரப்பிரிவு களைச் சிந்தாமணியும் காட்டுகின்றது.

### 3. 1. வணிகர்களின் செல்வ மேம்பாட்டு நிலை :

சமுதாயத்தில் அரசர்களுக்கு ஒப்பாக மதிக்கத்தக்க அளவில் வணிகர்கள் பொருளாதார மேம்பாட்டுடன் வாழ்ந்துள்ளனர் அவர்கள் அணிகலன்கலைச் சொரியும் போது கீழே சிதறியவற்றை எடுத்துக் கொள்ளமாட்டார்கள் (நாமகள் : 86) மகளிர் கூந்தல் சேர்தலால் வீழ்ந்த பொன் மாலைகளும் சிறுவர்களைந்திட்ட செம்பொன் கண்ணிகளுமே வீடுகளில் காணப்படும் குப்பைகள் (நாமகள் : 99) சீதத்தன் காந்தருவதத்தையின் யாழ்ப் போட்டிக்குச் செய்த ஏந்’பாடுகளால் தம்மையொத்த வணிகர்களையே வறியவர் ஆக்கிவிட்டான் (காந்த : 125) என்பனவற்றை வணிகர்களின் உயர் பொருளாதார நிலைக்குரிய சான்றுகளாகக் கூறலாம்.

### 3. 2. வணிகர் செல்வாக்கு :

சுரமஞ்சரியின் தந்தை குபேரதத்தன் மன்னனுக்கு மூவுலகையும் விலைகொள்ளுமளவுக்கு மாலை ஒன்றைக் கையுறையாகக் கொடுத்ததும் மன்னன் ஆணைப்படி நகர வீதிகளில் ஆடவர் வழங்குதல் நீங்கியது. மாடங்களில் உள்ள ஆண்பாவைகள் கூடப் பெண் பாவைகளாக்கப்பட்டன. (குணமாலை : 57) இது, வணிகர் தம் பொருளாதார மேம்பாட்டால் சமுதாயத்தில் எதனையும் செய்து முடிக்கும் சமூக வல்லமையுடன் (Social ability) வாழ்ந்தமையைக் காட்டுகின்றது.

### 3. 3 இன்ப வாழ்க்கை வாழ்தல் :

ஏமாங்கத நாட்டு ஊர் வருணனையின் போது செல்வ வளமுடைய மேட்டுக் குடியினர் ஆட்டுக் கடாக்களையும் கோழி

களையும் மோதவிட்டு, அவற்றைக் கண்டு களித்து ஆரவாரிக்கும் ஒலி வருணனையும் இடம் பெறுகின்றது (நாமகள்: 44) இதனால் மேட்டுக்குடியினர் பொழுது போக்கு நிறைந்த இன்ப வாழ்க்கை வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

## 3.4. வறியவர் இழிநிலை :

சீவகன் தன் மனைவியிடம் தானத்தின் வலிமையையும் பெருமையையும் கூறுங்கால் அழுக்குடைய சிறிய துணிகளை முள்ளாகிய ஊசியால் தைத்த தையல் நிறைந்த ஆடையை அணிந்து குளிர்மிக்க மாசித் திங்களில் பாவையே பிச்சையிடுக எனக்கூறிக் கையில் ஓட்டை ஏந்திச் செல்வர்களுடைய மனையிற் செல்லக் கூசி நிற்பவர்கள் முற்பிறப்பில் கொடுத்தறியாதவர்களே என்கின்றான் (முத்தி: 331) இதனால் பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினர் (depressed class) வறுமை நிறைந்த, எளிய, துன்பகரமான, இழிந்த வாழ்க்கை வாழ்ந்தமை தெரியவருகிறது. மேலும் பொருளாதாரத் தாழ் நிலைக்குக் காரணம் சமனற்ற பகிர்வே (unequal distribution) என எண்ணாது, முற்பிறப்பு வினையே காரணம் எனக் கற்பிக்கப்பட்ட நிலையும் புலப்படுகிறது. எட்டானும் பத்தானும் இவ்வுலக இன்பங்கள் இல்லை (கேமசரி: 188) என்பதாலும் நலிவுற்ற வறியவர்களின் சமுதாய இயலாமை நிலை (social inability) விளங்குகின்றது.

## 3. 5. வேளாளர்கள் :

வேளாளர்களிலும் நிலவுரிமையுடைய மேட்டுக் குடியினரும் நிலவுரிமையற்ற உழைக்கும் பிரிவினரும் காணப்பட்டமையைச் சிந்தாமணியில் அறிய முடிகின்றது. ஏமாங்கத நாட்டு வருணனையுள் பண்ணைகளிலிருந்து விற்பதற்காக நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்லும் பண்டிகள் பற்றிய குறிப்பு உள்ளது (நாமகள் : 32). அது போன்று கதிர் அறுத்தல், நெற்சூடு சுமத்தல் முதலிய விவசாய வேலைகளைச் செய்யும் மள்ளர்களும் நாற்று நடுதல், களை பறித்தல் முதலான வேலைகளைச் செய்யும் கடைசியரும் குறிப்பிடப்பெறுகின்றனர். (நாமகள் : 16, 17, 20, 26, 28). எனவே, விவசாய வேலைகளைச் செய்யும் நிலமற்ற ஆண், பெண் உழைப்பாளர்கள், அவர்களுடைய உழைப்பால் பெற்ற உபரியை நுகர்ந்து வாழ்ந்த நிலவுரிமையுடைய வேளாளர்கள் என இரு பிரிவுகள் சமுதாயத்தில் நிலவியமையை அறியலாம்.

**முடிவுரை :**

4. 1. சிந்தாமணி காட்டும் சமுதாயத்தில் நால்வகைப் பாகுபாடுகளின் அடிப்படையில் நிலவிய தரப்பிரிவுகளில் வைதீக அந்தணர்கள் உயர் சமூக மதிப்புடன் விளங்கினர்.

4. 2. நால்வகைப் பாகுபாட்டின் அடிப்படையில் மக்களிடையே குலம் பாராட்டும் எண்ணமும் குலவழித்திருமணமும் சிறப்புற்றிருந்தன எனலாம்.

4. 3. ஆனால், நட்பு, பெருமை போன்ற காரணங்களால் இது நெகிழும் தன்மையுடனும் காணப்பட்டுள்ளது.

4. 4. தொழில் அடிப்படையில் பிற உயிர்களைக் கொல்லும் தொழிலை மேற்கொண்ட வேட்டுவரும், பரதவரும் இழிகுலத்தவராகவும் இழிபிறவியினராகவும் ஒதுக்கப் பெற்றிருந்தனர்.

4. 5. சுடுகாடு காக்கும் தொழில் செய்தோர் புலையன் என இழித்துரைக்கப் பெற்றிருந்தனர்.

4. 6. பொருளாதார நிலையில் மேம்பாடுற்ற வணிகர்கள் செல்வச் செழிப்புடனும், சமூக ஆற்றலுடனும் உயர் சமூகத் தரப்பிரிவில் வாழ்ந்துள்ளனர்.

4. 7. செல்வர்கள் பொழுதுபோக்கு நிறைந்த இன்பவாழ்க்கை வாழ்ந்துள்ளனர்.

4. 8. நிலவுரிமையுடைய வேளாளர்கள் உபரி உற்பத்தியைப் பெற்று உயர் நிலையிலிருந்துள்ளனர்.

4. 9. பொருளாதார நிலையில் நலிவுற்ற வறியவர்கள் சமூக இயலாமையுடன் துன்பம் நிறைந்த எளிய வாழ்க்கை வாழ்ந்து, தாழ்ச்சமுதாயத் தரப்பிரிவில் காணப் பட்டுள்ளனர்.

4. 10. நிலவுரிமையற்ற வேளாளர்கள் விவசாய வேலைகள் செய்து வாழ்ந்துள்ளனர்.

இவ்வாறு சிந்தாமணி காட்டும் சமுதாயத்தில் தரப்பிரிவுகள் நிலவியமையை அறியமுடிகின்றது.

# மவுன மொழி

டாக்டர் பா. வீரப்பன்
தமிழ் விரிவுரையாளர்
மண்டல கல்வியியல் கல்லூரி
மைசூர் - 570 006

மொழி கருத்துப் பரிமாற்றக்கருவி, ஆம். நமது உள்ளத்து எழுகின்ற உணர்வுகளை மற்றையோருடன் பகிர்ந்துகொள்ள இது பயன்படுகிறது. உணர்வுகள் முழுதுமாகவே சொற்களால் மட்டும் உணர்த்தப்பெற முடிவதில்லை. நேரிடையாகச் சொற்களால் உணர்த்தப் பெறுவதைவிட அதிக உணர்வுகளை கருத்துகளைப் புலப்படுத்த விரும்பும்போது நடனக்கலையின் தோற்றம் உறுதிப் படுகிறது. நவரச வெளிப்பாட்டினை நடனக்கலை வெளிப்படுமாற்றி னைப் பரதமுனி பாங்காகக் காட்டுகின்றார். அகப்புற உணர்வு களின் வெளிப்பாட்டினை வெளியிடும் இலக்கியங்களும் இலங்கத் தகும் வகையினைத் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் மெய்ப்பிக் கின்றது.

அண்மையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் குஷ்வந்த் சிங்கின் 'The Language of Love' எனும் கட்டுரை வெளியாகி உள்ளது. (Oct 18). அதில் அவர் காதல் பரிமாறிக் கொள்ளப் படும் மொழி வகையினை மூன்றாகப் பகுக்கின்றார். முதலாவது பேச்சில்லாதது, இரண்டாவது பேச்சின் எழுத்து வடிவம், மூன்றாவது வகை உடலால்-உடல் உறுப்புகளால் பேசுவது.

இவை, உணர்வுப் பரிமாற்றங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை அன்று முதல் இன்றுவரை இலக்கணக்காரர் முதல் இலக்கியக்காரர் பத்திரிகையாளர் வரை பகுத்து நோக்கி வருகின்றனர் என்பதனை அறிகிறோம்.

காதல் பிறப்பது கண்ணால்; வெளியிடப்படுவது சொல்லால் உணரப்படுவது உடலால். இவை மூன்றினையும் மவுனம், பேச்சு, உடலசைவு என மொழியின் மூன்று கூறுகளாக்கிக் காண்பது பொருத்தமாகக் காண்கிறது.

காதல் பிறக்குமாற்றினைச் செகப்பிரியன்,

Tell me where is fancy bred,
or in the heart or in the head?
How begot how nourished?
Reply, reply,
It is engendered in the eyes,
with gazing fed; and fancy dies
in the cradle where it lies.

எனக்குறிக்கின்றார்.

(தொடரும்)

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். தெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும் இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு


## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. | 50 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. | 6 00 |
| கபிலர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 4 00 |
| நக்கீரர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 75 |
| **பிற வெளியீடுகள்** | | |
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | | |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 4 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்-613 002.

**Regd. No. TN/TB/24**

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ஆசிரியர், ~~[illegible]~~ தஞ்சை
சரபோஜி மன்னர் சரசுவதி
மகால் நூலக இதழ்
அரண்மனை வளாகம்.
தஞ்சை. 613 001

ஆசிரியர்
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுபவர் : திரு. [illegible]. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002
அச்சிடுபவர் : திரு. M சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜவீதி,
தஞ்சாவூர் - 613 009.